5. In case of the said Thamotharampillai Sadasivam were to die without making such appointment out of the male descendants of the said Sadasivam the oldest male look after the said vidiyasalai building and manage with the powers vested on the said Sathasivam accordingly from the descendants of the said Sadasivam eldermales should have succession to be such manager.

If there were to be an efficient of males in the said Thamotharampillai Sadasivam's descendants the eldest brother of the said Sadasivam--- T.P.Thamotharam and his male descendants should manage the said vidiyyasalai and the properties belonging there to with all pocors as vested in Thamotharampillai Sadasivam and his male descendants

6. In the said T.P.Thamotharam had no male descendants the said visuvanathan Thamothampillai's eldest daughter Mankayatkarasi's according to age should look after and manage the said vidiyasalai building and its properties in succession.
7. All trustees appointed should manage the said vidiyasalai buildings and its properties in conformity with the conditions laid above even otherwise they should have the power right vested on them by these presents.
8. If any dispute arises between the trustees of the said vidiyasalai building and its properties and others both parties should appoint two arbitrators and should abide by the decision of the said arbitrators any of them fail to carry out the decision of the arbitrators, they should fail an action is a court of law and decide the matter.

Whereas be debt bond dated 18[th] February 1915 and attested by this notary under no:8723 the aboveproperty was mortgaged by me to Vinasithamby Vaithilingam of usan manager of kandasamy temple rected in the land called kaaduvalau at usan for the sum of Rs.5000-00. I will pay the amount and redeem the mortgage and has been delivered with the mortgage bond.

I the said Thamotharampillai Sadasivam do hereby accept this.

Witness here to Vaithiyanathan Sithamparanathathesikar of meesalai and Kandiah Sivakuru of madduvil South these being witness this deed was executed in the office of the notary at Chavakachcheri on 12[th] of May 1923.

Sd.V.Thamotharampillai

Sd.V.Sadasivam

Witnesses:

V.Sithamparanathathesikar

K.Sivakuru

*1921*ம் ஆண்டு அளவில் திரு வி. தாமோதரம்பிள்ளை அவர்களின் அயராத உழைப்பினால் ஒரு நிரந்தர கட்டடமும் இரு வகுப்பறை கொட்டில்களும் கொண்டதாக பாடசாலையாக உருப்பெற்றிருந்தது. *1976* ஆம் ஆண்டிற்கு முன் அதிபர் அலுவலகம் நூலகம் சித்திர அறை விளையாட்டு அறை என்பவற்றை கொண்ட கட்டடத் தொகுதி தொலைக்காட்சி மண்டபம் அமைந்துள்ள இடத்தில் அமைந்திருந்தது. இக் கட்டடத்தொகுதி *1921* இல் காணப்பட்ட கட்டடமாக கருதக்கூடியதாக உள்ளது. இக் கட்டடமே பாடசாலையின் முதல் நிரந்தரக் கட்டடமுமாகும்.

*1921- 1935* காலப்பகுதியில் ஆங்கிலப்பாடசாலைக்கான அமைக்கப்பட்ட கட்டிடமாக B மண்டபத்தை கருதமுடியும். இக்கட்டிடத்தின் முகப்பில் ஆங்கிலத்தில் எமது மகுடவாசகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இக் கட்டடத் தொகுதி காலத்துக்கு காலம் பிரதி அதிபர் அலுவலகம் சிற்றுண்டிச்சாலை ஆய்வுகூடம் மரவேலைக் கூடம் ஆசிரியர் ஓய்வறை வகுப்பறை சித்திரகூடம் என இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.




கட்டுரையில் மண்டபங்கள் குறிக்கப்பட்டுள்ள விதம் மேலே படத்தில் காட்டப்பட்டுள்ளது.

தொடக்கப்பள்ளிக்குச் செல்கின்ற நுழைவாயிலுக்கு வடக்காகவும் அமைந்து காணப்படுவது F மண்டபம் ஆகும். இது ஆரம்ப காலத்தில் விஞ்ஞான ஆய்வு கூடமாகவும் 5ம் வகுப்பு வரையிலான பிள்ளைகளின் பிரார்த்தனை அறையாகவும், மனையியல் அறையாகவும் ஆசிரியர் ஓய்வு அறையாகவும் விளங்கியதாக அறிய முடிகிறது. இவ் மண்டபத்தில் தற்போது வகுப்பறைகள் காணப்படுகின்றது. மண்டபத்தின் பழைமை மற்று தகவல்களை கொண்டு நோக்கும்போது 1945 இல் அமைக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வுகூடத்தொகுதி இக் கட்டடமாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

எமது பாடசாலையின் அடுத்த குறிப்பிடத்தக்க பௌதிக வள விருத்தி 1935 இல் கட்டப்பட்ட பிரதான மண்டபமாகும். இது அருணாசலம் அதிபர் அவர்களின் அயராத சலியாத உழைப்பினால் உருக்கு தூண்களுடனான அக்காலத்தின் உயர்தொழிலநுட்பத்துடன் நவீன கட்டடமாக நிர்மாணிக்கப்பட்டது. உள்ளக அரங்கை கொண்டதாக பிரதான மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. 1968 இல் திரு மு.தா.சுப்பிரமணியம்அவர்களால் திறந்த வெளி அரங்கு 12000/= செலவில் அமைக்கப்பட்டது. இதன்போது மண்டபத்தின் உள்ளக அரங்கம் அகற்றப்பட்டு திறந்த வெளி அரங்கு உள்ளக அரங்காகவும் செயற்படக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1970 பெப்ரவரியில் பாடசாலையின் காணியும் கட்டடமும் மேலே காட்டப்பட்டுள்ளது.

கூடியதாக அமைக்கப்பட்டது. இதனால் பிரதான மண்டபம் அதிக மாணவரை உள்ளடக்க கூடியதாக நீட்சிபெற்றது. 1977 இல் 25000/= செலவில் பிரதான மண்டபம் செப்பனிடப்பட்டு இம் மண்டபத்திற்கு அதை அமைத்த அதிபர் அருணாசலத்தின் பெயர் சூட்டப்பட்டது.

அதிபர் முத்துக்குமாருவின் தூரசிந்தனையில் ஆசிரியர் முருகப்பாவின் காணி (ஒரு பகுதி) நன்கொடையில் ஆசிரியராக உதவி அதிபராக இருந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு வே குமாரசாமியின் முயற்சியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் உதவியுடன் தண்டவாளத்தை தூண்களாக கொண்டு தொடக்கப்பள்ளி கட்டிடம் அமைக்கப்பட்டது. 1952 இல் பூர்த்தி செய்யப்பட்ட இக்கட்டடம் இரயில் மண்டபம் என அழைக்கப்பட்டது. 1966 இல் மூன்று வகுப்பறைகள் அதிகரிப்பு செய்யப்பட்டது. இக்கட்டடம் ஆரம்பபிரிவாகவும் பின்பு கோட்டக்கல்வி அலுவலகமாகவும் 2017 இல் புணரமைக்கப்பட்டு தற்போது தொழிற்கல்விப் பிரிவாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கண்டி வீதிக்கு சமாந்தரமாக காணப்படும் தற்போது 5 வகுப்பறைகளாக பயன்படும் பழைய வகுப்பறைத் தொகுதி 1971 இல் அரசின் நிதிக்கொடை 25000/= செலவில் (J Block) கட்டப்பட்டது. 1973 இல் பெற்றார் ஆசிரியர் சங்கத்தால் தொழிற்கூடம் ஒன்று 25000/= செலவில் அமைக்கப்பட்டது. A மண்டபம் என்று அழைக்கப்பட்ட இக் கட்டடம் கயிறு திரிக்கும் தொழிற்கூடமாகவும், மோட்டார் தொழில்நுட்பகூடமாகவும் களஞ்சியமாகவும் தற்போது நடன அறையாகவும் இன்றளவும் பயன்படுத்தப்படுகிறது.

கல்லூரி வீதிக்கு சமாந்தரமாவும் காணப்படும் கட்டடம் C, D, E ஆகும். இக்கட்டடமானது ஆரம்ப காலத்தில் நாதர் மண்டபம் என்ற பெயரில் கிடுகுகள் வேயப்பட்ட கட்டடமாக விளங்கியதாக லயன் டாக்ரர் அருளாநந்தம், முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







1970 பெப்ரவரியில் பாடசாலையின் காணியும் கட்டடமும் மேலே காட்டப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




30.12.2010 பாடசாலையின் காணியும் கட்டடமும் மேலே காட்டப்பட்டுள்ளது.

பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் சதாசிவமூர்த்தி, நல்லதம்பி ஆசிரியர் போன்றோர்கள் கூறுகின்றார்கள். இதில் E பகுதி 1963 இல் திரு. ந. கே. கந்தையா அவர்கள் கல்லூரியின் அதிபராக இருந்த காலப்பகுதியில் பாரளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்கள் அரசிடமிருந்து ரூபா 33000/= பெற்றுக் கொடுத்தார். அவ்வுதவியால் 9 அறைகள் கொண்ட கட்டடமாக அமைக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்களின் உதவியால் 1972 இல் 26000/= செலவிட்டு 5 வகுப்பறைகள் D Block கட்டப்பட்டன. 1973 இல் அரசு வழங்கிய ரூபா 20000 /= இன்று இக் கட்டிடத் தொகுதியில் மனையியல் கூடமும் பகுதி தலைவர் அறையும் வகுப்பறைகளும் இயங்கிவருகின்றன.

வெற்றிவேலு அதிபரின் சிந்தனையில் புதிய நிர்வாக அலகும் நூலகமும் 1976 ஆம் ஆண்டில் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் நிதியீட்டத்தின் மூலம் பெறப்பட்ட ஒன்ரரை இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு மேற்கு ஜேர்மன் நாட்டு இலங்கைக்கான தூதுவராலய செயலாளர் செல்வி ஊர்சுலா முல்லரால் திறந்து வைக்கப்பட்டது. இன்று முழுமையாக இக்கட்டிடம் அதிபர் அலுவலகத்துடன் நிர்வாக அலகாக செயற்பட்டு வருகின்றது.

அரசின் கொடையாக ரூபா 50000/= பின்பு இரண்டு இலட்சமும் பெறப்பட்டு 1979 - 1981 காலப்பகுதியில் தொலைக்காட்சி மண்டபம் எனப்படும் கட்டிடத் தொகுதி பிரதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபத்தின் இணைப்பாக புதிய பிரதி அதிபர் அலுவலகம், உடைமாற்றும் அறை, ஆசிரியர் தங்கும் அறை என்பவற்றுடன் அமைக்கப்பட்டது. இத்துடன் தற்போதய விஞ்ஞான ஆய்வுகூடத்தின் பின்புறம் புதிய மனையியல் கூடமும் இக்காலத்தில் குறித்த நிதிக் கொடையை பயன்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட வேலையாகும். இவ் வேலைகள் வெற்றிவேலு அதிபரின் அயராத முயற்சியால் பூர்த்தி செய்யப்பட்டதை அறியமுடிகின்றது. இதில் மனையியல்கூடம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அகற்றப்பட வேண்டிய நிலையில் இன்றும் களஞ்சியமாக பயன் படுத்தப்பட்டு வருகிறது. 2013 2014 இல் பிரானஸ் பழைய மாணவர்சங்கம் வழங்கிய நிதி 7 இலட்சம் செலவில் தொலைக்காட்சி மண்டப பிராதான மண்டப இடைப்பகுதி பிரதான மண்டபத்துடன் இணைத்து அகலிப்பு செய்யப்பட்டது. பின்னர் 2017ல் மத்திய கல்வி அமைச்சின் ஊடாக பாடசாலையில் பெருந்திருத்த வேலைகளுக்கென ஒதுக்கப்பட்ட சுமார் 80 இலட்சம் ரூபா நிதியில் தொடங்கிய பிரதான மண்டபம் மற்றும் தொலைக்காட்சி மண்டபம் மற்றம் இவ் மண்டபங்களுடன் இணைந்த பகுதிகள் செப்பனிடல் வேலைகள் இன்றளவும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

1957 இல் மண்டலேஸ்வரன் அதிபராக இருந்த காலத்தில் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அரசு தாய் மொழியை பயிற்று மொழியாக பிரகடனம் செய்ததால் ஆங்கிலப் பாடசாலையும் தமிழ்ப் பாடசாலையும் ஒன்றாக இணைக்கப்பட்டது. எமது பாடசாலை 1962 இல் அரச பாடசாலையாக அரசால் பொறுப்பேற்கப்பட்டது. 1963 இல் திரு ஆ.க.கந்தையா அதிபராக செயற்பட்டபோது பழைய மாணவர்களின் உதவியுடன் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைக்கும் முயற்சி செயற்படுத்தப்பட்டது. 1966 - 1970 காலப்பகுதியில் திரு .மு.வைத்திலிங்கம் அதிபராக இருந்த காலத்தில் விஞ்ஞான ஆய்வுகூட வேலை பெரும்பகுதி நிறைவு பெற்றிருந்தது. 1970 இல் வெற்றிவேலு அதிபர் அதிபராக பொறுப்பேற்று 1971 இல் விஞ்ஞான ஆய்வுகூடத்தை நிதி அமைச்சர் என் எம் பெரேராவை அழைத்து திறந்து வைத்தார். திரு.வெற்றிவேலு அவர்கள் பழைய மாணவர் சங்க செயளாளராக இருந்து ஆரம்பித்த விஞ்ஞான ஆய்வுகூட வேலை அவர் அதிபராக பொறுப்பேற்று பூர்த்தி செய்து வைத்தார். 2014 இல் 1 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டது.

1976 இல் ஒன்ரரை இலட்சம் இரு மாடிக்கட்டிடத்தை அமைக்க வழங்கியிருந்தது. இக் கட்டடத்தை அமைப்பதற்கு திரு சிவபாதம் செட்டியாரிடம் 40000 ரூபாவிற்கு 8 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. இக்காணியில் 8 வகுப்பறை கொண்ட இரண்டு மாடிக்கட்டம் அமைக்கப்பட்டது. இம் மண்டபமே தற்போது H மண்டபம் என அழைக்கப்படுகிறது. இன்றவரை இம் மண்டபம் வகுப்பறையாக பயன்பட்டு வருகிறது.

பாடசாலை வீதியின் மறுபுறம் 1952 இல் இரயில் மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. 1978 மிகுதி நிலப்பகுதியில் தொடக்கப் பள்ளிக்கென நாடாளுமன்ற உறுப்பினர் உதவியால் அரச நிதிக்கொடை 87000 ரூபா பெறப்பட்டு இருமாடிக்கட்டடம் அமைக்கப்பட்டது. இக் கட்டடம் ஆரம்பப்பிரிவாகவும் பின்பு கோட்டகல்வி அலுவலகமாகவும் தற்போது உளவளத்துணை, முறைசாரா கல்வி பகுதியாக செயற்பட்டுவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் நிலஅமைப்பும் கட்டிடங்களும் (1960-1972)




குறிப்பு

A, C, D, F, H, J,K, L, M,N,P,Q

ஆகிய கட்டிடங்கள் தற்போது இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A - கைவினைப்பாட கட்டிடம் (கயிறு திரித்தல்)

B - அப்போதைய ஆய்வு கூடமும் ஆசிரியர் தங்குமிடம் (ஓய்வுபெறும்)

C - நிலம் சீமெந்திடப்படாத இரண்டு வகுப்பறைகளை கொண்ட தற்காலிக கொட்டகை

D - அதிபர் அறை, காரியாலயம், நூலகம்

E - அருணாசலம் பிரார்த்தனை மண்டபம்

F - சுண்ணாம்பு சுவரிலான இரண்டு வகுப்பறைக் கட்டிடம்

G - கல்லூரி ஒழுங்கைக்குச் சமாந்தரமாக அமைக்கப்பட்ட புதிய கட்டிடம்

H - Train Block கட்டிடம்

I - தலைமை ஆசிரியர் அறையும் 5ம் வகுப்பு வரையானபிள்ளைகளின் பிரார்த்தனைகூடமும்.

Home Science அறை, ஆசிரியைகள் ஓய்வு அறை.

J - மகளிருக்கான கழிப்பறை

K - சிறுதற்காலிக கட்டிடம் - பன்னவேலை பயிற்சிக்கானது

L - பால்மா களஞ்சியப்படுத்தலும் பால்தயாரித்து வழங்கவும்

M - சீமெந்து நிலமிடப்பட்ட கிடுகுகளால் வேயப்பட்ட சிறுகட்டடம்

(சங்கீத வகுப்பிற்கான அறையும், (முன்னர் தங்குமிடவசதியாக பாவிக்கப்பட்டது, 6ம் வகுப்பு அறையும் )

N - வேலியோரம் அமைக்கப்பட்ட நீண்ட சீமெந்து நிலமிடப்பட்ட கிடுகுகளினால் வேயப்பட்ட கொட்டகை.

P - ஆண்களிற்கான கழிப்பிடம்

Q - சுண்ணாம்பு சுவரிலான கிடுகுகளால் வேயப்பட்ட இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடம்

Q1 - பிரதான வாசல்

Q2 - காலை/ மாலைகளில் மாத்திரம் திறக்கப்படும் மரத்திலான கேற்று

P1 - விளையாட்டு மைதானம்

R - திரு திருமதி சிவபாதசுந்தரம் செட்டியாருக்குரிய ஆதனம்

S, T - பெயர் தெரியாத இருவருக்குரிய ஆதனங்கள்

T1 - பெருநெல்லிமரம்

T2 - பலாமரம்

T3 - குடைவிரித்து நிழல்பரப்பிய புளியமரம்

T4 - பரந்து வளர்ந்து காய்த்து குலுங்கும் மாமரம்

R, S, T - தற்போது கல்லூரி நிலப்பரப்புடன் உள்வாங்கப்பட்டுள்ளது.

T1, T2, T3, T4 - தற்போது அம்மரங்கள் அகற்றப்பட்டுள்ளன.

- ஆக்கம் ச. மூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LAND REGISTRY
24261
03 OCT 2016
JAFFNA

545
28/09/2016

வகை : அறுதி

ரூபா : 4,280,000/=

காணி : ஒன்று

முற்பதிவு : F 294/52, F 275/201

யாழ்ப்பாணம்

இல : 545
28.09.2016

இத்தாற் சகலருமறிக தாமோதரம்பிள்ளை வீதி, சங்கத்தானை சாவகச்சேரி யோகீஸ்வரன் ஜெயக்குமார் (தே.அ.அ.இல : 532952093 V) உம் யோகீஸ்வரன் சூரியகுமாரன் (தே.அ.அ.இல : 590910465 V) உம் ஆகிய நாங்கள்.

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி சார்பில் மேற்படி கல்லூரியின் முதல்வர் நடராசா சர்வேஸ்வரன் (தே.அ.அ.இல : 712641070 V) மேற்படி கல்லூரியின் பழையமாணவர் சங்கத்தின் நோர்வே (Norway) கிளை இனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பணம் என வெளிப்படுத்தி தரப் பற்றிக் கொண்ட ரூபா நான்கு மில்லியன் இருநூற்று எண்பதாயிரம் (ரூபா. 4,280,000.00) கிரயமாக

இதன் பின் காணும் ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் குறித்த யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆகிய இப்பாடசாலைக்கு

இதனால் கையளித்தும் ஆட்சியையும் ஒப்படைக்கின்றோம் ஆகையால் இன்று முதல் என்றும் இவ் ஆதனத்தை யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி இன் சொந்த ஆதனமாக ஆண்டனுபவிப்பார்களாக

இவ்வாதனம் இவ்விதம் அறுதி விற்கப் போதிய உரித்துந் தத்துவமும் உண்டென்றும் இவை யாதேனும் வகையாய்ப் பாரிக்கப்பட்டு அல்லது பாரதீனப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை என்றும் குறித்த அறுதி வாங்கற்காரருக்கு இவற்றை என்றென்றைக்கும் தற்காத்துக் கொடுப்போமென்றும் வெளிப்படுத்தி

இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு வே.கனகசபை முகதாவில் நிறைவேற்றிய இலக்கம்: 3886 உடைய 1953-03-01 திகதியிடப்பட்ட நன்கொடை உறுதிப்படியும் அதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேற்றிய இலக்கம்: 6635 உடைய 1955-10-05 திகதியிடப்பட்ட அறுதி உறுதிப்படியும் முறையே எங்களின் தந்தையையும் அவ்வாறே எங்கள் தந்தையைக் கொள்விலையாகவும் தாயார் ஐ தேடியதேட்டமாகவும் வந்தடைந்து மேற்படி எமது பெற்றோரின் இறப்பின் மேல் வாரிசுகளான எம்மை வந்தடைந்த எமது உரிமையும் தங்குதடையற்ற ஆட்சியுமானதுமான ஆதனம் என்றும் வெளிப்படுத்தி இவ் அறுதி உறுதியை நிறைவேற்றிக் கொடுக்கின்றோம்.

F917 109
2016/10/23

அதிபர் விடுதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட காணியின் ஆதன உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் விடுதி திறந்து வைத்தல்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999 இல் ஜேர்மன் தொழில்நுட்ப அபிவிருத்தி நிறுவனத்தால் மாணவ மாணவிகளுக்கு தனிதனி கழிப்பறைகள் அமைக்கப்பட்டன. இக் காலப்பகுதியில் கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆய்வுகூடத்திற்கும் H மண்டபத்திற்கு இடையில் ஆண்களுக்கான கழிப்பறை அமைக்கப்பட்டது. 2011 இல் மாணவிகளுக்கான கழிப்பறை தொகுதி யுனிசெவ் நிறுவனத்தால் அமைக்கப்பட்டது. 2016 இல் மத்திய அரசின் 19 இலட்சம் நிதி அனுசரணையுடன் பெண்களுக்கான மலசலகூடத் தொகுதி அமைக்கப்பட்டது. 2019 இல் மத்திய அரசின் நிதி ஒதுக்கீட்டில் 7 இலட்சங்கள் பெறுமதியான மாணவருக்கான அடிப்படை சுகாதார வசதி நிலையம் ( கழிப்பறை, குளியலறை ) தொழில்கல்வி பிரிவில் அமைக்கப்பட்டது. இதே ஆண்டில் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்களின் 1 மில்லியன் ஒதுக்கீட்டில் மாணவர் ஆசிரியருக்கான அடிப்படை சுகாதார வசதிகள் (கழிப்பறை, குளியலறை ) மேம்படுத்தப்பட்டது.

1970 களில் தொழிலதிபர் திரு சி.நவரத்தினம் அவர்களின் 6000 ரூபா செலவில் சுற்று மதில் செப்பனிடப்பட்டது. 1999 இல் ஆர் பீ என் அரிசி ஆலை மற்றும் சிவா ரேடிங் கோவின் அனுசரணையுடன் 250 அடி மதில் அமைக்கப்பட்டது. ஐடியல் வேக்ஸ் நிறுவனத்தினர் புதி வாயில் கேற்றுக்கு அனுசரனை வழங்கியிருந்தனர். பழைய மாணவன் திரு ந.த.பூபாலசிங்கத்தின் அனுசரயையுடன் பிரதான வாயிற்கேற் அமைக்கப்பட்டது.2009 இல் பிரதான வீதியின் பக்கமள்ள மதில்கள் செப்பனிடப்பட்டதுடன் RAAN மண்டபத்தின் முன்பாக கல்லூரியின் பழைய மாணவியான அமரர் திருமதி சியாமளா இரவிச்சந்திரன் ஞாபகார்த்தமாக 5 இலட்சம் செலவில் அலங்கார முகப்புவாயில் அமைக்கப்பட்டது. 2011 இல் கல்லூரியின் வடகிழக்கு மூலையில் 100 அடி மதிற் சுவர் கட்டப்பட்டது. 2012 இல் A9 வீதி அகலிப்பு காரணமாக 900 அடி நீளமான மதில் RDA நிதியுதவியுடன் நவீன முறையில் அமைக்கப்பட்டது. 2014 இல் வடமெற்கு புறத்தில் 30,70 அடி நீளமான மதில் கட்டப்பட்டு நுழைவாயில் கதவு அமைக்கப்பட்டது.

எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு திரு கே. எஸ் குகதாசன் அதிபரின் தீர்க்கதிசனமான முயற்சியால் 29.08.1989 இல் இருந்து இந்து ஆரம்ப பாடசாலை என்ற பெயருடன் தனித்த இயங்கத் தொடங்கியது. 2003 இல் ஐக்கிய இராட்சிய பழைய மாணவர் சங்கத்தினரின் 10 இலட்சம் நிதிக் கொடையுடன் இந்து ஆரம்ப பாடசாலைக்கு 40 பரப்பு காணி தாமோதரம்பிள்ளை வீதியில் கொள்வனவு செய்யப்பட்டது. SDC நிறுவனத்தின் நிதி கொடையுடன் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் 03.09.2009 இல் இருந்து ஆரம்பப்பிரிவு இயங்கதொடங்கியது. எமது பாடசாலையின் ஆரம்பபிரிவு இயங்கிவந்த கட்டடத்தொகுதிகள் பாடசாலையால் பொறுப்பேற்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நிர்வாக கட்டடத்தின் கீழ் உள்ள கிணறு பயன்பாட்டில் இருந்துள்ளது. 1963 - 1965 காலப்பகுதியில் தற்போதைய ஆய்வு கூடத்தின் பின் எற்கனவே தோண்டப்பட்டிருந்த கிணறு செப்பனிடப்பட்டது. திரு செ. சபாரத்தினபத்தர் இதற்கான உதவியை வழங்கியிருந்தார் இது பாடசாலையின் இரண்டாவது கிணறு ஆகும். 1979 இல் திரு மு.த.சுப்பிரமணியம் அவர்களின் உதவியுடன் தற்போதைய A,B மண்டபங்களுக்கருகில் மூன்றாவது கிணறு அமைக்கப்பட்டது. 2003 இல் US AID அனுசரணையுடன் M மண்டபத்தற்கும் கண்டிவீதிக்கும் இடையில் தண்ணீர் தாங்கி கட்டப்பட்டது. இதற்கான குழாய் கிணறு 2009 ஆம் ஆண்டு யுனிசெவ்வின் 125000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Appli No 5230 25/08/2

அறுதி

முற்பதிவு யாழ்ப்பாணம் F 666 / 93.

: 1

: 500,000/= இல : 1646

06.08.97

இத்தால் சகலருமறிக

சந்திரசேகரா அதிபர் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான ஆதன உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

appli No 5234
25/09/06

THAMBIAH VELAYUTHAM, LL.B
ATTORNEY-at-LAW & NOTARY PUBLIC
COMMISSIONER FOR OATHS.
CHAVAKACHCHERI SRI LANKA.

யாழ்ப்பாணம்
முற்பதிவு
F 636/25

வகை: அறுதி

ரூபா: 144000/-

காணி: 1 ஒன்று

இல: 1855

28.04.1999

இந்தார் சகலருமறிக கைதடி கிழக்கு, கைதடி உடையாபிள்ளை திருநாவுக்கரசுவும் (தே.அ.அ.இல. 292960816V), பெண் இராசம்மாவும் (தே.அ.அ.இல. 396312506V) ஆகிய நாங்கள் சாவகச்சேரி இந்துக்கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சபையின் தலைவரும் குறித்த கல்லூரியின் அதிபருமாகிய சுந்தையா சந்திரசேகரா குறித்த பாடசாலை அபிவிருத்திச் சபையின் நிதியிலிருந்து சொல்லித் தரப் பற்றிக்கொண்ட ரூபா 144,000/- [illegible] நாற்பத்தி நாலாயிரமே கிரயமாக,

இதன் கீழ் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் குறித்த சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அறுதியாக விற்றும் இதனால் கையளித்தும் ஆட்சியையும் ஒப்படைக்கிறோம்.

ஆகையால் இவ்வாதனத்தை குறித்த பாடசாலையும் இதன் பின்வாரிசும் என்றென்றும் குறித்த சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆதனமாக ஆட்சி பரிபாலிப்பார்களாக.

இவ்வாதனத்தை இவ்விதம் அறுதியாக்கப் போதிய உரித்தும் நாங்களும் எமக்குள்ளெவரும் இவ்வாதனம் யாதொரு வகையால் பாரிக்கப்பட்டல்லது பராதீனப்படுத்தப்பட்டிருக்கவில்லையென்றும், குறித்த இந்துக்கல்லூரிக்கு இவ்வாதனத்தை என்றென்றைக்கும் நற்காத்துக் கொடுப்போமென்றும் வெளிப்படுத்தி இந்த அறுதி உறுதி முடித்துக் கொடுக்கிறோம்.

இவ்வாதனம் எம்களில் 2ம் பேர்வழி பேருக்கு 1999ம் ஆண்டு மாசி மாதம் 10ந் திகதி பிரசித்த நொத்தாரிசு

சந்திரசேகரா அதிபர் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான ஆதன உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா நிதியுதவியுடன் அமைக்கப்பட்டது. 2014 இல் AUS AID நிதியுதவி பெற்று சிற்றுண்டிசாலையின் முன்பாக குழாய் கிணறு அமைக்கப்பட்டது. சுவிற்சலதந்து பழைய மாணவர் சங்கத்தால் 1 மில்லியன் பெறுமதிளான நீர் சுத்திகரிப்பு பொறி தொகுதி அமைக்கப்பட்டு 13.03.2015 இல் ஓய்வுநிலை அதிபர் திரு அ.கைலாயபிள்ளை மற்றும் சுவிஸ் OSTA சார்பில் திரு சிறிகாந்தன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். மேற்படி குழாய் சுத்திகரிக்கப்பட்ட நீர் 6 இடங்களில் மாணவர்கள் பயன்படுத்தகூடியதாக வளங்கப்படுகிறது.

2008 இல் ஆசிரிய சகோதரத்துவமும் அபிவிரத்தி சங்கமும் இணைந்து தொலைக்காட்சி மண்டபத்தின் பின் பகுதியில் 60X40 துவிச்சக்கர வண்டி பாது காப்பு நிலையம் அமைக்கப்பட்டது. 2012 இல் 4 துவிச்சக்கர வண்டி பாது காப்பு நிலையம் கண்டி வீதி மதிலோரமாக அமைக்கப்பட்டது. NSBS புதிய வகுப்பறையின் முன்பாக 2016 இல் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டது.

1992 இல் மூன்று அரைநிரந்தர வகுப்பறைகள் கொண்ட K மண்டபம் தேசநிர்மானிகளால் அமைக்கப்பட்டது. இவ் வகுப்பறைகள் அகற்றப்பட்டு அவ்வருடத்தில் "கனடாவின் பழையமாணவர் சங்க மாணவர் ஆசிரியர் நலனோம்பு நிலையம்" 2016 இல் அமைக்கப்பட்டது. 1998 இல் பழைய மாணவர்சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக்குழு இணைந்து 5 அரைநிரந்தர வகுப்பறைகளை கொண்ட L மண்டபம் அமைக்கப்பட்டது. இவற்றில் இரண்டு வகுப்பறைகள் பழுதடைந்த நிலையில் அகற்றப்பட்டது. L மண்டபத்திற்கு அருகே 2011 இல் பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டிருந்தது. தொழில்நுட்ப பீடம் மகிந்தோதய ஆய்வுகூடம் ஆகிய மண்டபங்களுக்கிடையில் புதிய பஸ்தரிப்பிடம் 2019 இல் அமைக்கப்பட்டது. பழைய பஸ் தரிப்பிடம் கிரிக்கற் பயிற்சிக்கான இடமாக மாற்றப்பட்டுள்ளது. H மண்டபத்தை இணைந்திருந்த I மண்டபம் "கனடாவின் பழையமாணவர் சங்க மாணவர் ஆசிரியர் நலனோம்பு நிலையம்" அடிக்கல் வைப்பதற்காக அகற்றப்பட்டது.

இலங்கையின் நீண்ட உள்நாட்டு யுத்த சூழ்நிலையில் நிரந்தரமான பௌதிக வள அபிவிருத்திகள் இடம்பெற முடியாத நிலமை காணப்பட்டது. ஆயினும் 1998 இல் திரு கே.சந்திரசேகரா அதிபர் தீர்க்கதரிசனத்துடன் பாடசாலையின் விஸ்தரிப்பு அவசியம்




உ மண்டபம் கட்டுவதற்காக 1976இல் கொள்வனவு செய்யப்பட்ட காணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என உணர்ந்து பாடசாலையின் பின்புறம் 11 பரப்பு காணியை கொள்வனவு செய்தார். அதிபரின் முயற்சியால் அக் காணியில் 1999 இல் 25 இலட்சம் அரச நிதிக்கொடையில் வகுப்பறைகளுக்கான 3மாடிக் கட்டடத்திற்கான கீழ்த்தள வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டது. யுத்த இடம்பெயர்வுகளின் பின் திரு அ. கைலாயபிள்ளை அதிபரின் முயற்சியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மேற்படி கட்டடம் 2009 இல் வடக்கின் வசந்தம் 180 நாள் வேலைத்திட்டத்தில் இரு மாடிக் கட்டடமாக மாற்றப்பட்டு மேற்றளவேலை பூர்த்திசெய்யப்பட்டது. இக் கட்டடத்தில் வகுப்பறைகளும் கற்றல் வளநிலையமும் அமைந்துள்ளது. இக்கட்டடம் தற்போதைய RAAN மண்டபம் என அழைக்கப்படுகிறது.

அதிபர் திரு.அ.கைலாயபிள்ளை அவர்களின் முயற்சி 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் எமது பாடசாலையும் உள்வாங்கப்பட்டது. இதனால் பாடசாலை பல பயன்களைப் பெற்றுக் கொண்டது. 1000 இடைநிலைப்பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இரு மாடிக்கட்டடமான மகிந்தோதய விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு வடமாகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி அவர்களால் 03.07.2013 இல் அடிக்கல் நாட்டப்பட்டது. 9 மில்லியன் பெறுமதியான இவ் ஆய்வுகூடம் 26.02.2015இல் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு.வே.இராதாக்கிருஸ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ் ஆய்வுகூடத்தில் இடைநிலைக்கான கணித, விஞ்ஞான ஆய்வுகூடங்களுடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மொழிக்கற்கைகளுக்கான அறை என்பவற்றைக் கொண்டுள்ளது.

1000 இடைநிலைப்பாடசாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 30 மில்லியன் பெறுமதியான மூன்று மாடிக்கட்டடமான தொழில்நுட்ப வளாகத்திற்கு பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தாவால் 25.06.2014 இல் அடிக்கல் நாட்டப்பட்டது. இவ் வளாகம் 01.04.2017 இல் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு.வே.இராதாக்கிருஸ்ணன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்வளாகத்தில் குடிசார் பொறியியல், எந்திரவியல், உயிர் முறைமை தொழில்நுட்பம், இலத்திரனியல் மின்னியல் ஆய்வுகூடங்களுடன் 4 வகுப்பறைகளும் அமைந்துள்ளன.

அதிபர் திரு.அ.கைலாயபிள்ளை அவர்கள் பாடசாலையில் தரமான சிற்றுண்டிச்சாலை அமைய முயற்சியை மேற் கொண்டிருந்தார். கனடாவில் பழைய மாணவர் சங்க பிரதிநிதிகளுடன் அதிபர் நடாத்திய கலந்துரையாடலில் "கனடாவின் பழையமாணவர் சங்க மாணவர் ஆசிரியர் நலனோம்பு நிலையம் செயல்வடிவம் பெற்றது". பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ விஜயகலா மகேஸ்வரன் அவர்களினால் 26.01.2015 அடிக்கல் நாட்டப்பட்டது. இக் கட்டட வேலை 10 மில்லியன் செலவில் பூர்த்தி செய்யப்பட்டு அதிபர் திரு.அ.கைலாயபிள்ளை அவர்களால் 25.04.2016 இல் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டட மாடியில் ஆசிரியர் ஓய்வறையும் கீழ்த்தளத்தில் சிற்றுண்டிச்சாலையையும் கொண்டுள்ளது.

அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டத்தின் கீழ் 32 மில்லியன் செலவில் 12 வகுப்பறைகள் கொண்ட 3 மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் 18.06.2016 இல் கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு.வே. இராதாக்கிருஸ்ணன் அவர்களால் நாட்டப்பட்டது. 23.09.2019 இல் மேற்படி வகுப்பறைத் தொகுதி பாராளுமன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ. கணபதிப்பிள்ளை
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்
யாழ்ப்பாணம்

வகை: அறுதி
காணி: 1
ரூபா: 1250,000/-

LAND REGISTRY
13 JUN 2008
5446
JAFFNA

முற்பதிவு
யாழ்ப்பாணம்
எல் 743/26

இல: 1715.

இத்தாற் சகலருமறிக,

சாவகச்சேரி, சங்கத்தானை கல்லூரி வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகம் மகள் சுதாஜினியாகிய நான் சாவகச்சேரி இந்துக்கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தலைவரும் குறித்த கல்லூரியின் அதிபருமாகிய அருணாசலம் கயிலாயபிள்ளை குறித்த பாடசாலையின் பழையமாணவர்சங்க நிதியென்று சொல்லித்தரப்பட்ட பன்னிரண்டு இலட்சத்து ஐம்பதினாயிர(1250,000/-)ம் ரூபாயாக

இதன் பின் காணும் உப அட்டவணையில் கண்டு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதனுடன் சேர்ந்தவைகளையும் குறித்த சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அறுதியாக விற்று இதனால் கையளித்து ஆட்சியையும் ஒப்படைக்கின்றேன்.
ஆகையால் இவ்வாதனத்தை குறித்த பாடசாலையும் அதன் நிர்வாகமும் என்றென்றைக்கும் குறித்த சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஆதனமாக ஆண்டனுபவிப்பார்களாக.

இவ்வாதனத்தை இவ்விதம் அறுதியாக விற்கப்போகிற உரித்தும் தத்துவமும் எனக்குண்டென்றும் இது யாதேனும் வகையாக பாரிக்கப்பட்டோ அல்லது பராதீனப்படுத்தப்பட்டோ இருக்கவில்லையென்றும் குறித்த இந்துக்கல்லூரிக்கு இவ்வாதனத்தை என்றென்றைக்கும் தற்காத்துக்கொடுப்போமென்றும் வெளிப்படுத்தி இந்த அறுதி உறுதியை நிறைவேற்றிக்கொடுக்கின்றேன்.

இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் கந்தசாமி முன்னிலையில் 22.04 2003இல் நிறைவேற்றப்பட்ட 24145ஆம் இலக்க அறுதி உறுதிப்பிரகாரம் எனது சொந்தமும் ஆட்சியுமானது.

கைலாயபிள்ளை அதிபர் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான ஆதன உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது இல. 97849
நித்தியானந்தன் கேசாந் LL.B
சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்.
யாழ்ப்பாணம்.

07 NOV 2018
27403

வகை : அறுதி

ரூபா : 7,926000/=

காணி : ஒன்று

முற்பதிவு : F 947/92, F 947/93

யாழ்ப்பாணம்

இல : 332
28.10.2018

இத்தாற் சகலருமறிக சாவகச்சேரி தெற்கு, சாவகச்சேரி தற்காலம் ஜேர்மனி சபாநாயகம் குகபாலன் ஆகிய நான் எனது அற்றோனி தத்துவக்காரன் இல. C3, Anderson Place, Colombo-05 வன்னியசிங்கம் கர்ணன் (தே.அ.அ.இல. 703110126 V) மூலம் தொழிற்பட்டும் சாவகச்சேரி தெற்கு, சாவகச்சேரி தற்காலம் கனடா சபாநாயகம் வரதராஜன் (கடவுச்சீட்டு இலக்கம்: GK 465086 )ஆகிய நான் எனது அற்றோனி தத்துவக்காரி இல. C3, Anderson Place, Colombo-05 மகிதினி கர்ணன் (தே.அ.அ.இல. 735172271 V) மூலம் தொழிற்பட்டும்.

சாவகச்சேரி, சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் அதன் சார்பில் தொழிற்பட்டு அதன் பதவிவழித் தலைவர் அதிபர் நடராசா சர்வேஸ்வரன் (தே.அ.அ.இல. 712641070 V) உம் பொருளாளர் சிவப்பிரகாசம் சிவநாவலன் (தே.அ.அ.இல. 197132000514) உம் தரப்பற்றிக் கொண்ட ரூபா ஏழு மில்லியன் தொளாயிரத்து இருபத்தாறாயிரம் (ரூபா: 7,926,000.00) கிரயமாக

இதன் பின் காணும் ஆதனடாப்பில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தையும் அதற்குச் சேர்ந்தவைகளையும் குறித்த சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்திற்கு

இதனால் அறுதிவிற்றும் கையளித்தும் ஆட்சியையும் ஒப்படைக்கின்றோம் ஆகையால் இவர்களும், இவர்களின் உரித்தாளர் மரணசாதன தத்துவகாரர் உரிமைத்தத்துவகாரர் சாட்டுதல்காரரும் இன்று முதல் என்றும் இவ் ஆதனத்தை தங்கள் சொந்த ஆதனமாக ஆண்டனுபவிப்பவர்களாக

இவ்வாதனம் இவ்விதம் அறுதிவிற்கப் போதிய உரித்துந் தத்துவமும் உண்டென்றும் இவை யாதேனும் வகையாய்ப் பாரிக்கப்பட்டு அல்லது பாராதீனப்படுத்தப்பட்டும் இருக்கவில்லை என்றும் குறித்த அறுதி வாங்கற்காரருக்கு இவற்றை என்றென்றைக்கும் தற்காத்துக் கொடுப்பேனென்றும் வெளிப்படுத்தி இந்த அறுதி உறுதி முடித்துக்கொடுக்கின்றேன்.

இவ்வாதனம் எங்களில் முதலாம் பெயர்வழிக்காரன் பெயருக்கு 2018 ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ஆம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் எழுதி நிறைவேற்றிய இலக்கம் : 4427 கொண்ட நன்கொடை உறுதிப்படியும் மூன்றாம் பெயர்வழிக்காரன் பெயருக்கு2018 ம் ஆண்டு சித்திரை மாதம் 19 ஆம் திகதி கொழும்பு பிரசித்த நொத்தாரிசு நளினி கணேசயோகன் முகதாவில் எழுதி நிறைவேற்றிய இலக்கம் : 4428 கொண்ட நன்கொடை உறுதிப்படியும் சொரியலாக சமபங்குகளாக எம்மை வந்தடைந்த எமது உரிமையும் தங்குதடையற்ற ஆட்சியுமானதுமான ஆதனம் என்றும் வெளிப்படுத்தி இவ் அறுதி உறுதியை நிறைவேற்றிக் கொடுக்கின்றோம்.

F956 ... 50

07.11.2018
திகதி

கேட்போர் கூடம் அமைப்பதற்காக கொள்வனவு செய்த காணியின் ஆதன உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர் கௌரவ திரு. எம்.ஏ.சுமந்திரன் அவர்களால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

துரித கிராமிய அபிவிருத்தி திட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. எம்.ஏ சுமந்திரன் அவர்களால் ஒதுக்கப்பட்ட 1 மில்லியன் நிதியில் பாடசாலைக்கான பாடசாலையின் சாதனை காட்சிப்படுத்தலுடன் கூடிய பேருந்துதரிப்பிட நிழற்குடை அமைக்கப்பட்டது. 19.03.2019 இல் மேற்படி நிழற்குடை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு. எம்.ஏ.சுமந்திரன் அவர்களால் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. கம்பரெலிய துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ திரு.எம்.ஏ.சுமந்திரன் அவர்களின் 1 மில்லியன் ஒதுக்கீட்டில் பாடசாலை மைதானம் புனரமைக்கப்பட்டு கிரிக்கற் ஆடுகளமும் அமைக்கப்பட்டது.

2016 இல் அரச நிதி ஒதுக்கீட்டில் 10 மில்லியன் பெறுமதியான அதிபர் விடுதி அமைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டது. 2018 இல் அதிபர் விடுதி வேலை பூர்த்தி செய்யப்பட்டது. இவ் விடுதியை அமைப்பதற்கான காணியை நோர்வே பழைய மாணவர் ஆசிரியர் சங்கம் 28.09. 2016 இல் 42 இலட்சம் செலவில் கொள்வனவு செய்து பாடசாலைக்கு வழங்கியிருந்தது. இக் காணி பாடசாலையை ஆரம்பிப்பதற்கு காணியை நன்கொடையாக வழங்கிய பரமு அவர்களின் பூட்டன்களான யோகீஸ்வரன் ஜெயக்குமார், யோகீஸ்வரன் சூரியகுமாரன் ஆகியோரின் ஆதனம் என்பது குறிப்பிடத்தக்கது. இக் காணிப்பகுதி நோர்வே வளாகம் என பெயரிடப்பட்டு 09.09.2019 நோர்வே பழைய மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி திருமதி சிவயோகம் யோகமூர்த்தி அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

1902 இல் சங்கத்தானை நிலசுவாந்தர் திரு பரமு 14 பரப்பு காணியை பாடசாலையின் முகாமையாளர் தாமோதரனாருக்கு நன்கொடையாக வழங்கினார். 1902 இன் பின்பு சிவபாதம் செட்டியார் ஒரு நிலப்பகுதியை பாடசாலைக்கு வழங்கியதாக உறுதிப்படுத்தபடாத தகவலாக அறியமுடிகிறது. 1976 இல் அரசு ஒன்றரை இலட்சம் நிதியை இரு மாடிக்கட்டடத்தை ( H மண்டபம்) அமைக்க வழங்கியிருந்தது. இக் கட்டடத்தை அமைப்பதற்கு திரு சிவபாதம் செட்டியாரிடம் 40000 ரூபாவிற்கு 8 பரப்பு காணி கொள்வனவு செய்யப்பட்டது. 1998 இல் திரு கே.சந்திரசேகரா அதிபர் பாடசாலையின் விஸ்தரிப்பு அவசியம் என உணர்ந்து பாடசாலையின் பின்புறம் 11 பரப்பு காணியை கொள்வனவு செய்தார். 1999 இல் 4 பரப்பு காணி 150000 ரூபாவிற்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டது. 2008 இல் ஐக்கிய இராச்சிய பழைய மாணவரின் 13 இலட்சம் நிதியுதவியுடன் 3.5 பரப்பு காணி NSBS கட்டடம் அமைந்துள்ள மூலையில் கொள்வனவு செய்யப்பட்டது. அதிபர் விடுதிக்கான 4 பரப்பு காணி 28.9.2016 இல் நோர்வே பழையமாணவர் கொள்வனவு செய்து வழங்கினர். இது பாடசாலையை ஆரம்பிப்பதற்கு காணியை நன்கொடையாக வழங்கிய பரமு அவர்களின் பூட்டன்களான யோகீஸ்வரன் ஜெயக்குமார், யோகீஸ்வரன் சூரியகுமாரன் ஆகியோரின் ஆதனம் என்பது குறிப்பிடத்தக்கது. கேட்போர்கூடம் ஒன்றை அமைப்பதற்கான காணியாக 6 பரப்பு காணி 8 மில்லியன் செலவில் 28.10. 2018 இல் கொள்வனவு செய்யப்பட்டது. இக் காணி பாடசாலையை ஆரம்பிப்பதற்கு காணியை நன்கொடையாக வழங்கிய பரமு அவர்களின் பூட்டன்களான சபாநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகில் உள்ள பாடசாலை நல்ல பாடசாலை திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கட்டடத் திறப்புவிழா













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனம்:- நன்கொடை
இல. 2843
9-9-64
பா 3000/=

இச்சாதனம் யார் யாரைச் சேரற்பாலதோ அவர் அவர்கட்கு அனுப்பும் வாழ்த்துச் செய்தியாவது:

ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக்

1944ல் குஞ்சுப்பரந்தனில் வயற்காணி ஒன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சொந்தமாக இருந்ததற்கான ஆதாரம் (1964இல் ஆதனமாற்ற உறுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



N. E. Nicholas
------------------- Registrar of Lands, Jaffna
do hereby certify that the foregoing is a true copy of
a deed of Donation made from the duplicate/certified
copy under section 31 [29] of he Notaries Ordinance filed
of record in this office and the same is granted on the
application of M. S. Rasaiah
28/03/02
Land Registry, Jaffna
Registrar of Lands, Jaffna
N. E. Nicholas
Addl. REGISTRAR OF LANDS
JAFFNA

1944ல் குஞ்சுப்பரந்தனில் வயற்காணி ஒன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சொந்தமாக இருந்ததற்கான ஆதாரம் (1964இல் ஆதனமாற்ற உறுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1944ல் குஞ்சுப்பரந்தனில் வயற்காணி ஒன்று சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு சொந்தமாக இருந்ததற்கான ஆதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குகபாலன், சபாநாயகம் வரதராஜன் ஆகியோரின் ஆதனம் என்பது குறிப்பிடத்தக்கது. இக் கொள்வனவிற்கான நிதி ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தினால் வழங்கப்பட்டது. பாடசாலை ஆதனத்துள் அடக்கப்பட்டுள்ள சிவபாதம்செட்டியாருக்கு உரிமையான 12 பரப்பு காணியை முறைப்படி சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி எமது பௌதிகவளம் தொடர்பான தொகுப்பு எமக்கு கிடைத்த ஆவணங்கள் தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் குறுகிய காலப்பகுதியில் தொகுக்கப்பட்டதாகும். எமது ஆதனங்கள் பாடசாலைக்கு வெளியே உள்ளதாக அறிகிறோம். பாடசாலைக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பாடசாலை தொடர்பான பௌதிக வளங்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் தந்துதவுமாறு தென்மராட்சி சமூகத்தினரை வேண்டுகின்றோம். கீழே தரப்படும் ஆவணம் குஞ்சுப்பரந்தனில் எமது பாடசாலைக்கு வயற்காணி இருந்தமைக்கான ஆதாரமாகும்.




## அமையப்பெறவிருக்கும் கட்டடத் தொகுதி பற்றிய சிறு கண்ணோட்டம்...

நாற்பத்தாறு வகுப்பறைகளுடன் இணைந்த அனைத்து வசதிகளுடனும் ஒரு முழுமையான கட்டடத் தொகுதியினை பின்வரும் எண்ணக்கருக்களின் அடிப்படையில் உருவாக்கிட எமது பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

- இருபதாம் நூற்றாண்டுக் கட்டடங்கள் இருபத்தோராம் நூற்றாண்டு கல்வித் திட்டங்களும் ஆசிரியர்களும் எதிர்கால சூழலுக்காக தயார்ப்படுத்தப்பட வேண்டிய மாணவர்கள் என்ற இலக்குகளுடன் நகர்ந்துகொண்டிருக்கும் எங்களுக்கு மிகவும் அத்தியாவசியமானதொரு பௌதிக வளமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தென்மராட்சியில் 400 மீட்டர் ஓட்டப்பாதையுடன் கூடிய மிகச் சிறந்த விளையாட்டு மைதானத்தினை உருவாக்கிட வேண்டும்.

- திறன் வகுப்பறைகளுடன், சுகாதார வசதிகளுடன் சர்வதேச கற்றல் நியமங்களுக்கு அமைவான கட்டமைப்பையும் பௌதீக வள உருவாக்கத்தையும் உண்டாக்கிட வேண்டும்.

- மிகச் சிறந்த ஒழுக்கம், தொடர்பாடல், நிருவாகம் முதலியவற்றை திறன்பட அமுல்ப்படுத்திட வேண்டும்.

- தேவையற்ற காலவிரையங்கள், வள விரையங்கள் ஆகியவற்றை கட்டுப் படுத்திட வேண்டும்.

- கற்றலுக்கான மிகச் சிறந்த சுற்றுச் சூழலை உருவாக்கி நல்கிட வேண்டும்.

இக் கட்டடத்திற்கான ஆரம்ப வேலைகள் 2020 இவ்வாண்டு ஆரம்பித்து மிக விரைவில் முடிவுறுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இக் கட்டடத் தொகுதி அமைப்பானது முழுமையாக பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட இருக்கின்றது. அதில் உலகம் பூராவும் பரந்து வாழும் எமது கல்லூரித் தாயின் பிள்ளைகள் அனைவரும் இணைந்து மேற்கொள்ளும் ஒரு தார்மீக கடமையாக தங்கள் பங்களிப்பை நல்கிட உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1993 இல் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பௌதிக வளத்தின் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பௌதிக வளத்திற்கான எதிர்காலத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பௌதிக வளத்திற்கான எதிர்காலத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றுகைகள்

## விளையாட்டுத்துறை தேசியநிலைச் சாதனைகள்



**அ.புவிதரன்**
கோலூன்றிப் பாய்தல்
முதலாம் இடம்
தங்கப்பதக்கம்



**நே.டக்ஷிதா**
கோலூன்றிப் பாய்தல்
முதலாம் இடம்
தங்கப்பதக்கம்



**அ.பவிதரன்**
கோலூன்றிப் பாய்தல்
முதலாம் இடம்
தங்கப்பதக்கம்



**ச.சங்கவி**
ஈட்டி எறிதல்
3 ஆம் இடம்
வெண்கலப்பதக்கம்



**சோ.தரணிகா**
கோலூன்றிப் பாய்தல்
4ஆம் இடம்



**வி.விசோபிகா**
கோலூன்றிப் பாய்தல்
5ஆம் இடம்



**மு.நீலாஜி**
கோலூன்றிப் பாய்தல்
6ஆம் இடம்

## மாகாண நிலைச் சாதனைகள்



**ச.சங்கவி**
தட்டெறிதல் 1ஆம் இடம்
ஈட்டி எறிதல் 1ஆம் இடம்



**வி.விசோபிகா**
தடைதாண்டல்
100 மீற்றம் - 3ஆம் இடம்



**சோ.தரணிகா**
முப்பாய்ச்சல் - 3ஆம் இடம்

20 வயது ஆண்கள்
(கபடி) 2ஆம் இடம் தேசியத்தில்
பங்குபற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணித ஒலிம்பியாட் போட்டி

### தேசிய மட்டத்தில் தெரிவு சர்வதேச தெரிவுப் போட்டியில் பங்குபற்றல்



**கு.சாந்தித்யன்**
பிரிவு - I



**ஜெ.ரகுராம்**
பிரிவு - I



**இ.விபுசானந்த்**
பிரிவு - II

### பிரிவு - III



**ஸ்ரீ. வனோஜா**



**க.சாம்பவி**



**இ.தவினுகன்**

### பிரிவு - I (தரம் - 6) - மாகாணமட்டத் தெரிவு



**கு.சாந்தித்யன்**



**ஜெ.ரகுராம்**



**சு.அஸ்வினியா**



**ஏ.அதீசன்**



**இ.திசானன்**



**கோ.டிதுசனன்**



**இ.விபுசானந்த்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெ.அக்ஷயன்



வி.ஹனுஜா



றொ.தீபிகா



செ.ஆரவி



ந.பார்கவி



க.அபிஷா

## பிரிவு - III (தரம் - 10,11)



ஸ்ரீ.வனோஜா



ப.சாம்பவி



சி.கிருஜன்

(கணித ஒலிம்பியாட் போட்டியில் சித்தியடைந்து இந்தியா ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றியோர்)



இ.தவினுகன்



வ.டிலுக்சன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித வினாடிவினாப் போட்டி - 2019

## தேசிய நிலைச் சாதனைகள் - வடமாகாண அணியில் பங்குபற்றிய எமது மாணவர்கள்



**கு.சாந்தித்யன்**
கனிஷ்ட பிரிவு
முதலாம் இடம்



**ஸ்ரீ.வனோஜா**
சிரேஷ்ட பிரிவு - I
இரண்டாம் இடம்



**ஜெ.விஸ்ணவி**
சிரேஷ்ட பிரிவு - I
இரண்டாம் இடம்



**த.சுந்தர்பவன்**
சிரேஷ்ட பிரிவு - II
இரண்டாம் இடம்

## தமிழ் மொழித்திறன் போட்டி - 2019
## மாகாண நிலை



**கோ.ஜகிர்தா**
இலக்கணப் போட்டி
பிரிவு - IV
3ஆம் இடம்



**நி.பிரியங்கா**
கவிதையாக்கம்
பிரிவு - V
3ஆம் இடம்

## இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டி - 2019

### தேசிய சாதனை



**ந.சேந்தன்**
மிருதங்கம் வாசித்தல்
1ஆம் இடம்

### மாகாண சாதனை



**சி.மோகனவாணி**
வயலின்
1ஆம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாண மட்ட பண்ணிசைப் போட்டி



பெண்கள் குழு

பிரிவு 6, 7, 8 - முதலாம் இடம்



ஆண்கள் குழு

பிரிவு 6, 7, 8 - மூன்றாம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Day Competition - 2019

## Provincial Level



**Miss.S.Asviniya**
*Grade-6*
*Dictation*
*3rd Place*



**Mas.B.Venukanan**
*Grade 8*
*Creative Writing*
*3rd Place*



**Miss.S.Mohanavani**
*Grade 9*
*Dictation*
*3rd Place*



**Miss.Vanoja**
*Grade 9*
*Creative Writing*
*1st Place*
*Dictation - 3rd Place*



**Mas.M.Jathavan**
*Grade-11*
*Creative Writing*
*3rd Place*



**Group Events** *Debate Team - 2nd Place*



**Role Play** *Grade 9 - 3rd Place*



**Role Play** *Grade-11 - 3rd Place*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள மொழித்திறன் போட்டி 2019 - மாகாண நிலை



**வி.சஞ்சித்**
பேச்சு
தரம் - 6
3ஆம் இடம்

## வணிகப் போட்டி 2019 - மாகாண நிலை



**ம.வீணஜா**
கட்டுரை
தரம் - 3
2ஆம் இடம்



**சி.கஜந்தன்**
குறுவினா
பிரிவு -3
2ஆம் இடம்

## விஞ்ஞான வினாடி வினாப் போட்டி - 2019 - மாகாண நிலை



**ஜெ.ரகுராம்**
ஆங்கில மொழி மூலம்
தரம் - 6
1ஆம் இடம்



**இ.விபுசானந்த்**
தரம் - 8
2ஆம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக விஞ்ஞானப் போட்டி - 2019 - மாகாண நிலை



**ந.பவிஷா**
தரம் - 7
1ஆம் இடம்



**அ.சியாந்தி**
தரம் - 8
3ஆம் இடம்



**ஜெ.சாருமதி**
தரம் - 9
2ஆம் இடம்

## 2018ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட சமூகவிஞ்ஞானப் போட்டி



**கோ.டிதுஷனன்**
தரம் - 6
8ஆம் இடம்



**சி.வனோஜா**
தரம் - 9
10ஆம் இடம்



**இ.தவினுகன்**
தரம் - 10
2ஆம் இடம்



**த.கஜித்திரன்**
தரம் - 10
5ஆம் இடம்



**க.ஜதுஷா**
தரம் - 11
4ஆம் இடம்



**சி.சாருகா**
தரம் - 8



**சி.கிந்துசன்**
தரம் - 12

**இவ் இருவரும் தேசிய நிலையில் பங்குபற்றல்**

## புத்தாக்கப் போட்டி - 2019 - தேசிய நிலை சாதனைகள்



**த.கோவர்த்தன்**
தரம் - 8
தங்கப்பதக்கம்



**வி.கனுஜா**
தரம் - 8
வெள்ளிப்பக்கம்



**சி.கோபிசுபானன்**
தரம் - 8



**தி.ஆர்த்திகன்**
தரம் - 9



**ஞா.கார்வண்ணன்**
தரம் - 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாக்குநர் போட்டி - 2019
## மாகாணமட்டத்தில் பங்குபற்றி சான்றிதழ் பெற்றோர்



## க.பொ.த சாதாரணதர பரீட்சை - 2018

### 9A சாதனையாளர்கள்


யு.ஜசிந்தன்


சு.லோஜிதன்


ச.அபிசன்


ச.லதுசியன்


ம.கோபிதன்


ப.பானுஜா


ப.வைசாலி


ப.கிருஷிகா


ச.ஜதுஷா


ம.தர்மிகா


ச.பிரின்சகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் - 2019

## வர்த்தகப்பிரிவு



தி.அபிநயன்
3A



ந.சரண்ராஜ்
3A



கு.பூர்ணிமா
3A



த.தர்சனாங்கி
3A



ம.நிதர்சனா
3A



யோ.பிரிந்தா
3A



பா.வைஸ்ணவி
3A



ந.வின்சனா
A 2B



தீ.சோஸ்ரீபன்
2A B



இ.சீதாராம்
2A B

## கணிதப்பிரிவு



ச.டனுஷன்
3A



க.பிரவிந்தன்
3A



ந.பாலகுமரன்
3A



க.அஜித்
3A



ச.சௌமியன்
2A B



மு.கங்காதீபன்
A B C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியல் பிரிவு



**ச.சங்கவி**
3A



**அ.கீர்த்தனன்**
2A B



**க.தரணிகா**
A B C

## கலைப் பிரிவு



**சி.கிந்துசன்**
3A



**சு.ஜஸ்மினா**
3A



**வே.லம்சிகா**
3A



**ர.சர்மிலன்**
2A B



**ச.நர்த்தியா**
A 2B



**த.சயந்தன்**
A 2B



**அ.ஜனுசா**
2A C



**கெ.மதுர்சா**
3B



**ஜெ.கஜானி**
2A C



**ச.காயத்திரி**
A B C



**இ.யசோதரன்**
3 B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரியில் தொழில்நுட்பப் பிரிவு



சி.டிலக்சி
B 2C



க.ஹானுஜா
A 2B



ம.ஹரிகரன்
B C S



க.பிரியங்கா
B 2C



கோ.சாகித்தியா
3 C

## பொறியியல் தொழில்நுட்பப் பிரிவு



க.வைஸ்ணவன்
3A



சி. விதுஷன்
2B C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்சொல் பேசுவோம்



"ஆதவனும் கீழ்த் திசையில் தோன்றி விட்டான் ஆகா! இவ்வுலகம் எல்லாம் அழகின் சோதி" என்பார் பாரதி தாசன். இது ஒரு நாள் அல்ல ஒவ்வொரு நாளும் நிகழும் இயற்கை அன்னையின் அற்புத அழகுத் தோற்றப் பொலிவு. அத்துணை அழகு மிக்க ஆனந்தமானதொரு விடயம் உலகு. இந்த ஆனந்த மயமான உலகில் என்றும் ஆனந்தம் நிலைக்கவும் பெருகவும் மனிதர்களாகிய நாம் வழிவகைகளை காண வேண்டும். இவ்வாறு இனிய உலகில் இன்பம் பெருக சான்றோர் வழி ஒன்றே இன்சொல் பேசுதல்.

இறைவன் நாவினைத் தந்தது வாழ்த்துவதற்கே. "வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும்" என்றும் "வாயே வாழ்த்துக்கண்டாய்" என்றும் திருமுறை தொடர்தல் வாயின் உயர்ந்த கைங்கரியத்தை எடுத்தியம்புகின்றன. வாழ்த்தாவிட்டால் கூட பரவாயில்லை குறைந்த பட்சம் இன்சொல் பேசலாம் அல்லவா. அவ்வாறு பேசுவதே அறம் என்று வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். "அழுக்காறு அவா வெகுளி இன்னா சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்" என்பது வள்ளுவர் வாய்மொழி. "இனிய உளவாக இன்னாது கூறல் கனி இருக்க காய் கவர்ந்தற்று" என்பதும் அவர்மொழியே. நாம் உச்சரிக்கும் இனிய சொற்கள் எமது உள்ளத்தின் உணர்வையும் உயர்வையும் வெளிப்படுத்தும் சாதனைகள். இது யாருக்கும் முடியாதே? இதில் என்ன கஸ்டம் இருக்க முடியும்.

"யாவற்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை, யாவற்குமாம் பசுவிற்கொரு வாயுறை, யாவற்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்று உரைத்த திருமூலர் நிறைவில் "யாவற்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே" என்று ஏகாத ஈறு கொண்டு நிறைவு செய்கின்றார். இது யாவற்கும் இயலும் இது கூடவா முடியாது என்பது அவர் வினா.

எங்கள் தாய்மொழி தமிழ். சொல்லின் உயர்வு தமிழ் சொல்லே என்றும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் போல் இனிதானது எங்கும் காணோம்" என்றும் தமிழின் சிறப்பையும் இனிமையையும் பாரதி உரைத்தமை நாம் அறிந்த ஒன்றே. எந்த மொழியிலாயினும் இன்சொல் பேசுதல் தவம். எனவே எங்கள் முன்னால் உள்ள முதியவர்களிடத்தில், எங்கள் பெற்றோர்களிடத்தில் எங்கள் ஆசிரியர்களிடத்தில் ஏன் எங்கள் நண்பர்கள் மற்றும் எம்மில் இளையவர்களிடத்திலும் கூட இன்சொல் பேசுவோம். எம்மை அறியாமலே நாம் உயர்வோம். சொற்களால் இந்தச் சூழலை இன்பமயமாக்குவோம். எங்கும் என்று இன்சொல் பேசி அன்பினை வளர்த்து ஆனந்தமாய் இந்த உலகினை காணுவோம்.

நன்றி

**மிகானா**
பிரிவு – II



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானமும் எதிர்காலமும்



இன்றைய 21ம் நூற்றாண்டிலே உலகம் ஒரு கிராமமாக சுருங்கி விட்டது. பற்பல புதிய தொழிநுட்பக் கண்டுபிடிப்புகளும் விஞ்ஞான வளர்ச்சியும் உலகையே தலைகீழாக மாற்றிப்போட்ட விட்டன. ஆம் புதிய புதிய மாற்றங்களாலும் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும் தான் எத்தனை விதையாகி செழித்து வளர்ந்து விழுதுகளைப் பரப்பி நிற்கும் விஞ்ஞானம் எதிர்காலத்தில் ஏற்படுத்தப் போகும் விளைவுகளை ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

மனிதனுடைய நீடித்த நிலைத்த வாழ்விற்கு விஞ்ஞானத்தின் பங்கு அபரிமிதமானது. சாத்தியமற்றன எனக் கருதப்பட்ட பல நேற்றைய கற்பனைகள் விஞ்ஞானத்தின் வளர்சியினால் சாத்தியமாகின. இன்றைய விஞ்ஞான வளர்ச்சியினால் வியப்புமிகினும், பாதக விளைவுகள் சிந்திக்க வைக்கத்தவறவில்லை என்றே கூறலாம்.

விஞ்ஞானத் தகவல் தொழிநுட்ப வளர்ச்சியால் சுருங்கி விட்ட உலகம், எளிதாகி விட்ட விண்வெளிப் பயணங்கள், மனித வாழ்வை இலகுவாகிவிட்ட புதிய கண்டுபிடிப்புகள், முறியடிக்கப்பட்ட மனித வாழ்விற்கான சவால்கள், எல்லைகளற்ற பரந்த சிந்தனை என்பன விஞ்ஞானத்தின் ஒரு முகமாக விளங்குகின்றது. மறுமுகம் சூழல் மாசடைதல், பேரழிவு ஆயுதங்கள், அதிகரித்து விட்ட நோய் நிலைமைகள், மனித மனங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிறழ்வுகள் என விஞ்ஞானத்தைப் பற்றிச் சிந்திக்கும் போது நிழலாடுகின்றது. எனவே இன்றைய விஞ்ஞானம் சாதித்து விட்ட சாதனைகள், ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சவால்களும் ஒரு சமாந்தரமான வளர்ச்சிப் போக்கினை காட்டுகிறது எனலாம்.

இன்றைய விஞ்ஞானம் ஏற்படுத்துகின்ற சவால்களே நாளைய எதிர்கால சந்ததி எதிர்கொள்ளப்போகும் மிகப்பெரிய சவாலாகவும் மாறக்கூடும். மனித வாழ்வை இலகுவாக்கி குறுகிய கால நன்மைகளைக் கொடுக்கின்ற விஞ்ஞானமானது மறுபுறம் நாளைய எதிர்கால தூர நோக்கிலான சவால்களை அள்ளி வழங்குகின்றது.

இன்றைய உலகின் போக்கில் காணப்படுகின்ற அபாயகரமான போட்டித்தன்மை பெரிய சவாலாக உள்ளது. அதாவது ஒவ்வொரு நாடும் தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துகின்ற ஒரு போட்டிக்களமாக உலகம் மாறி வருகிறது. இந்தக் களத்திலே ஒவ்வொரு நாடும் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்துகின்ற ஆயுதமாக விஞ்ஞானம் விளங்குகிறது.

இன்றைய காலகட்டத்திலே நவீன போரியல் யுத்திகளில் நாடுகளிடையே நிலவும் ஆதிக்கப்போட்டியினை உச்சக்கட்ட போராட்டக் களமாக விண்வெளிசார் ஆய்வுகள் விளங்குகின்றன. விண்வெளியில் தனது நாட்டை நிலை நிறுத்தி அங்கும் தன் அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார நிலைநிறுத்தலை ஏற்படுத்தி அதி தொலைதூர நோக்கில் உலக நாடுகள் இயங்க ஆரம்பித்து விட்டன. அதே போல கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள், அணு ஆயுதங்கள் என அறிவியல் துறை இன்று கொடிகட்டிப் பறக்கிறது.

இலத்திரணியல், பொறியியல், தொடர்பாடல், மூலக்கூற்றியல், விவசாயம் என ஒவ்வொன்றிலும் புரட்சியை ஏற்படுத்தத் தவறவில்லை. நவீன விஞ்ஞான பரிசோதனை முறைமைகள், சத்திர சிகிச்சை வசதிகள், கதிர் வீச்சு முறைமைகள், நுண்ணுயிரியல் கண்டுபிடிப்புக்கள, மரபணுக்கலப்பாக்கம், குளோனிங் முறைமைகள், நவீன விவசாய யுக்திகள், தொழிநுட்ப ரீதியான கண்டுபிடிப்புக்கள் இணை வசதிகள், அதிவேக போக்குவரத்துச் சாதனங்கள், மூலக்கூற்று ரீதியான கல்வி முறைமை எனப்பரந்துபட்ட அனுகூலங்கள் ஏராளம். தகவல் தொழிநுட்பத்தால் இன்று உலகமே சுருங்கி கிராமமாகி விட்டது.

நவீன மருத்துவ வசதிகள் பல்வேறு நோய்களை நீக்கி ஆரோக்கிய வாழ்வை வழங்குகின்றன. நவீன இலத்திரணியல் சாதனங்கள், இணைய வசதிகள், கல்வி முறைமைகள் என உலகம் ஒரு புதிய தளத்தில் நடைபோடுகிறது. நவீன விஞ்ஞானம் காட்டி நிற்கும் வளர்ச்சி மனிதனை உச்ச விருத்தியுற்ற ஒரு உயிரினமாக வகைப்படுத்துகின்ற போதும் அது ஏற்படுத்தியுள்ள பிரதிகூலங்கள், சவால்கள் புறக்கணிக்கத்தக்க வல்லமையும் அனுகூலமும் தரும் விஞ்ஞானத்தில் ஒரு முகமும், கொடூரமும் பேரழிவுகளும் தருகின்ற விஞ்ஞானத்தின் மறுமுகமும் உலகைத் திடுக்கிட வைக்கிறது.

எனவே விஞ்ஞானத்தின் சரியான பாவனை அல்லது சரியான திசையை நோக்கிய நகர்வு பிரதிகூலங்களைக் குறைத்து உலகின் தொடர்ச்சியான நிலவுகைக்கு துணைநிற்கும். நாளைய எதிர்கால சந்ததியின் நிலவுகையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற கண்டுபிடிப்புகள் இவ்வுலகிற்கு மேன்மையும் அனுலங்களையும் நிறைவாக வழங்கி நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**ஸ்ரீ. வனோஜா**

**பிரிவு - IV**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி ஒழுங்கைப் பேணுவோம்






**பாத்திரங்கள்**

| | |
|---|---|
| *சியாந் சிறியபருவம் (16 வயது)* | *பாடசாலை மாணவன்* |
| *ஆரூரன் (16வயது)* | *பாடசாலை மாணவன்* |
| *சிவகாமி (45 வயது)* | *சியாந்தின் தாய்* |
| *லக்சுமி (45 வயது)* | *ஆரூரனின் தாய்* |
| *முருகன் (50 வயது)* | *சியாந்தின் மாமா* |
| *சிவகுமார் (38 வயது)* | *சியாந்தின் மாமா* |
| *சியாந் வளர்ந்த பருவம் (30 வயது)* | *ஆசிரியர்* |
| *நிலக்ஷன் (15 வயது)* | *மாணவன்* |
| *கவின் (15 வயது)* | *மாணவன்* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்சி - 01

| | | |
|---|---|---|
| நேரம் | :- | மதியம் இரண்டு மணி |
| இடம் | :- | சியாந்தின் வீடு |
| பாத்திரங்கள் | :- | சியாந், ஆரூரன், சிவகாமி, லக்சுமி |

(சிவகாமி மத்திய இடத்தில் இருந்து பெட்டி பின்னுகிறாள். அப்போது மேல் வலத்தால் லக்சுமி நுழைகின்றாள்)

**லக்சுமி** :- என்ன சிவகாமி, பெட்டி பின்னுறியே?

**சிவகாமி** :- ஓமடி. எனக்கு தெரிஞ்சத செய்து விக்கிறன். அதில வாற காசிலதானே மோனப் படிப்பிக்கிறன்.

**லக்சுமி** :- சரி தான். நீ இப்பிடி கஷ்டப்பட்டு உழைக்கிறத பிள்ளை விளங்கிக் கொண்டாத்தானே?

**சிவகாமி** :- இண்டைக்கு விளங்காட்டிக்கும் எண்டைக்கோ ஒருநாள் விளங்கும் தானே?

**லக்சுமி** :- இப்பிடியே பகல் கனவு கண்டு கொண்டு இருக்க வேண்டியது தான்.

**சிவகாமி** :- ரெண்டு மணியாகுது சியாந்த இன்னும் காணேல்ல ஆரூரன் வந்திட்டானே வீட்ட?

**லக்சுமி** :- இல்ல சிவகாமி. இப்ப வந்துடுவினம் பார்.

**சிவகாமி** :- என்னவோ அவன படிப்பீச்சு நல்ல நிலைக்க கொண்டு வரவேணும்.

**லக்சுமி** :- இந்தா வாறான் பார்.

(மேல் வலத்தால் சியாந் உள்ளே நுழைகின்றான்.)

**சியாந்** :- ஹாய் ஆண்டி! ஆரூரன் வீட்ட போட்டான்.

**லக்சுமி** :- ஓமடா. இவர் வீட்டதான் நிக்கிறார்.

**சியாந்** :- ப்ரண்டோட பைக்க ஒருக்கா வாங்கி ஓடிப்பாத்துட்டு வாறன் அதுதான் லேட்டா போச்சு.

**லக்சுமி** :- பைக் ஓடினியோ? உனக்கிப்போ எத்தின வயசாகுது?

**சியாந்** :- எந்தக் காலத்தில இருக்கிறியள். இந்த வயசில இதையெல்லாம் பழகாட்டி இஞ்ச பிழைக்கேலாது.

**சிவகாமி** :- அதுக்கு படிக்காம பைக் ஓட்டினியோ?

**சியாந்** :- அம்மா, சும்மா சும்மா கத்தாதேங்கோ. அது சரி நான் கேட்ட ஹெல்மட் வாங்கீட்டிங்களோ?

**லக்சுமி** :- ஹெல்மட்டா? ஏன் உனக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சியாந்** :- என்ன கேள்வி இது ஆண்டி. மோட்டார் சைக்கிள் ஓட வேணும் எண்டா ஹெல்மட் போடத்தானே வேணும்.

**சிவகாமி** :- எங்களிட்ட எங்காலயடா அவளவு காசு?

**சியாந்** :- ப்ரண்டோடது. அப்பப்போ ஓட்டிப் பார்க்க தருவான்.

**லக்சுமி** :- படிக்கிற வயசில இதென்ன புதுப்பழக்கம் ஆ........

**சியாந்** :- எனக்கு இதுதான் பிடிக்கும். நான் என்ன செஞ்சா உங்களுக்கென்ன?

**சிவகாமி** :- வாயமூடு சியாந். பெரியாட்களுக்கு கொஞ்சமாவது மரியாத குடுத்துப் பழகு.

**சியாந்** :- என்ன நீங்கள் சும்மா சும்மா என்னையே திட்டுறியள்?

**சிவகாமி** :- உள்ள போ சியாந். அம்மாக்கு கோவம் வந்தா அடிச்சிடுவன்.

(சியாந் கோபத்துடன் மேல் இடத்தால் சென்று மறைதல்)

**சிவகாமி** :- மன்னிச்சிரு லக்சுமி. அவன் கோபத்தில ஏதோ கதச்சிட்டான்.

**லக்சுமி** :- பரவாயில்லை சிவகாமி. அவனும் என்ர பிள்ளை மாதிரி தானே.

**சிவகாமி** :- அது சரி. ஆரூரன் எப்பிடி படிக்கிறான்?

**லக்சுமி** :- அவனும் இப்பிடிதான். எப்ப பார்த்தாலும் பைக் புராணம் தான். படிக்கிறது கொஞ்சம் கொஞ்சமா குறையுது.

(ஆரூரன் மேல் வலத்தால் உள்ளே நுழைகிறான்.)

**ஆரூரன்** :- என்ன சிவகாமி ஆண்டி, அம்மா என்ன பத்தி ஏதோ பெருமையா சொல்லுறா போல.

**சிவகாமி** :- என்னடா, பைக் ஓட்டுறதிலதான் கவனம் செலுத்துறியாம். படிக்கிறது குறஞ்சிட்டாம்.

**ஆரூரன்** :- அப்பிடி எல்லாம் இல்ல ஆண்டி. நான் நல்லா தான் படிக்கிறன்.

**லக்சுமி** :- பொய் சொன்னா அடிவாங்குவாய்.

**ஆரூரன்** :- அதவிடுங்கோ, சியாந் எங்க? ரியூசனுக்கு போக வேணும். நேரமாகுது.

**சிவகாமி** :- பாத்தியே மறந்தே போட்டன். சியாந்... சியாந்... இஞ்ச வா.

(சியாந் மேல் வலத்தால் உள்ளே நுழைகின்றான்.)

**சியாந்** :- என்ன? ஏன் இப்பிடி கத்துறீங்கள்.

**ஆரூரன்** :- டேய் ரியூசனுக்கு போகோணும் வெளிக்கிடு.

**லக்சுமி** :- எத்தின மணிக்கு ரியூசன்? ஏன் இப்பவே போறியள்?

**சிவகாமி** :- வழமையா மூன்டு மணிக்குதானே தொடங்குறது.

**ஆரூரன்** :- இல்ல ஆண்டி. கொஞ்சம் கணக்கு செய்யோணும். விளங்கேல்ல அங்க வாறவங்கள கேட்டு செய்யலாந்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லக்சுமி :- அப்பிடியா. சரி அப்போ வெளிக்கிடுங்கோ.

சியாந் :- ரியூசன் காசு கட்டேல்ல. சேர் அடிப்பார். நான் போக மாட்டன்.

சிவகாமி :- உன்ர பாக்ல காசு வச்சிட்டன்.

சியாந் :- அப்ப சரி.

லக்சுமி :- சிவகாமி, ஒருக்கா என்னோட கடைக்கு வாறியோ, காய்கறி வாங்கோணும்

சிவகாமி :- அதுக்கென்ன. நானும் தான் வாங்கோணும். வா போவம்.

(சிவகாமி , லக்சுமி இருவரும் மேல் இடத்தால் செல்கின்றனர்.)

ஆரூரன் :- என்னடா, ஆண்டி ஹெல்மட் வாங்கித் தந்தவாவோ?

சியாந் :- அவங்களாச்சு வாங்கி தாறதாச்சு. ரியூசன் காசில தான் வாங்கோணும்.

ஆரூரன் :- ஆண்டிக்கு தெரிஞ்சா?

சியாந் :- பாத்துக்கலாம் டா.

ஆரூரன் :- என்னவோ என்னை மாட்டி விட்டுடாத.

சியாந் :- மாட்டி விடமாட்டன். வா நேரமாச்சு.

(சியாந். ஆரூரன் மேல் இடத்தால் சென்று மறைகின்றனர்.)

## காட்சி 02

| | | |
|---|---|---|
| நேரம் | :- | மாலை நான்கு மணி |
| இடம் | :- | சியாந்தின் வீடு |
| பாத்திரங்கள் | :- | சியாந், சிவகாமி, முருகன் சிவகுமார் |

(சியாந்தினை தாங்கியபடி சிவகுமார். முருகன் என்போர் மேல் வலத்தால் உள்ளே நுழைகின்றனர்.)

சிவகுமார் :- அம்மாடி சிவகாமி, சிவகாமி

(சிவகாமி மேல் வலத்தால் உள்ளே நுழைகின்றாள்)

சிவகாமி :- சிவா அண்ணை, முருகன் அண்ணை நீங்களா?............ சியாந் சியாந் என்னாச்சு உனக்கு?

முருகன் :- சின்ன அக்சிடன்ற் தான். கவலைப்படாத சிவகாமி.

சிவகுமார் :- சியாந்த அந்தக் கதிரையில இருத்துக்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அருகில் இருந்த கதிரையில் சியாந்தை இருத்துகின்றனர்.)

**சிவகாமி** :- என்னண்டுடா ஆச்சு?

**சியாந்** :- அம்மா, அது வந்து.......

**முருகன்** :- மோட்டார் சைக்கிள் ஓட்டி கன்றோல் பண்ணேலாம சுவரில இடிச்சிட்டான்.

**சிவகுமார்** :- இவன்ர பைக்கும் இல்ல. வேற ஆற்றையோ.

**சிவகாமி** :- எத்தின தரமடா படிச்சு படிச்சு சொன்னான். படிக்கிறது பார். கொஞ்சம் வளரட்டும் பைக் ஓட்லாமெண்டு சொன்னானா இல்லையா ஆ....?

**சியாந்** :- மன்னிச்சுக்கொள்ளுங்கோ அம்மா. ஆர்வத்தில தான் ஓடினான்.

**முருகன்** :- இந்தக்கால பெடியளுக்கு ஆர்வம் கூடத்தான்.

**சிவகுமார்** :- நல்ல வேளை நானும் அண்ணனும் அந்தப்பக்கத்தால போனதால கண்டு கொஸ்பிட்டல் கூட்டிக்கொண்டு போனம்.

**சிவகாமி** :- றொம்ப நன்றி அண்ணை.

**சியாந்** :- மாமா, றொம்ப நன்றி. நான் இனி மோட்டார் சைக்கிள் ஓடமாட்டன்.

**முருகன்** :- உன்ன நாங்கள் மோட்டாசைக்கிள் ஓட வேண்டாம் எண்டு சொல்லேல்ல.

**சிவகாமி** :- கொஞ்சம் வளர்ந்து லைசன்ஸ் எடுத்திட்ட ஓடு எண்டு தான் சொல்லுறம்.

**சிவகுமார்** :- அம்மா சொல்லுறத கொஞ்சம் கேட்டு நட சியாந்.

**சியாந்** :- சரி மாமா, நான் இனி ஒழுங்கா படிக்கிற வேலய மட்டும் பார்குறன்.

**முருகன்** :- இப்பவாச்சு உனக்கு புத்தி வந்திச்சுதே.

**சிவகுமார்** :- நாங்கள் எப்பவுமே சட்டத்தை மதிக்க வேணும். அப்பதான் விபத்து நடக்கிறது எல்லாம் குறைக்கலாம்.

**சிவகுமார்** :- நாங்கள் எப்பவுமே சட்டத்தை மதிக்க வேணும். அப்பதான் விபத்து நடக்கிறது எல்லாம் குறைக்கலாம்.

**சிவகாமி** :- உன்ர அப்பாவும் உப்பிடித்தான் குடிச்சிட்டு வண்டி ஓட்டி அநியாயமா செத்திட்டார்.

**முருகன்** :- குடிச்சிட்டெல்லாம் பைக் ஓட்டக்கூடாதுடா. உன்ர வயசுப் பெடியளுக்கு யாராச்சும் குடிப்பழக்கத்த பழக்குவானுகள்.

**சியாந்** :- மாமா, எனக்கு அந்தப் பழக்கம் எல்லாம் இல்ல.

**சிவகுமார்** :- அண்ணை உன்ன தப்பா நினைக்கேல்ல. நீ உப்பிடி கெட்ட பழக்கம் எல்லாம் பழகக் கூடாது எண்டு தான் சொல்றார். புரியுதே உனக்கு.

**சிவகாமி** :- நல்லா சொல்லுங்கோ.

**சியாந்** :- ஓம் மாமா.

**முருகன்** :- அப்ப நாங்க வெளிக்கிடுறம்.

**சிவகாமி** :- என்ன நீங்கள் வந்த உடனே வெளிக்கிடுறியள். இருந்து ரீ குடிச்சிட்டு போங்கோ.

**சிவகுமார்** :- இல்ல வேண்டாம். நேரமாகுது. வீட்ட போகோணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சியாந்** :- மாமா கொஞ்சம் நில்லுங்கோ.

**முருகன்** :- என்ன சியாந்? சொல்லு.

**சியாந்** :- என்ர ரியூசன் பாக் எங்க?

**சிவகுமார்** :- உனக்கு பின்னாடி இருக்கு பார்.

**சிவகாமி** :- ஏன்டா இப்ப உனக்கு?

(சியாந் பின்னாடி உள்ள பாக்ல இருந்து காசு எடுக்கிறான்)

**சியாந்** :- மாமா, இந்தக் காச வாங்கிக்குங்கோ.

**முருகன்** :- எதுக்கு இப்போ இது?

**சியாந்** :- இல்ல மாமா. இது அம்மா எனக்கு தந்த ரியூசன் காசு. நீங்கள் அந்த மோட்டார் சைக்கிளின்ர சேதத்துக்கு காசு குடுத்தீங்கள் எல்லோ. அதுக்காக தான்.

**சிவகுமார்** :- ஆர் இப்ப உன்ன இத தரச்சொல்லி கேட்டது? ஆ....

**முருகன்** :- இத எங்களிட்ட தந்துட்டு ரியூசனுக்கு என்னத்த கட்டுவ?

**சிவகாமி** :- அண்ணை அந்தக் காச வாங்கிக்கோ. நான் அவனுக்கு பேந்து குடுக்கிறன்.

**சியாந்** :- நான் இனிமேல் ரியூசனுக்கு போகாம வீட்ட இருந்து படிக்கிறன். ஸ்க்கூல்ல சொல்லிதாறத தானே அங்கையும் சொல்லித் தரீனம்?

**சிவகுமார்** :- அதுக்கு.... நீ வீட்ட நிண்டு படிக்கமாட்ட. ரியூசனுக்கு போ.

**சியாந்** :- அது வீண் செலவு. நீங்கள் முதலில் இந்தக் காச வாங்கப் போறியளோ இல்லையோ?

**சிவகாமி** :- அத வாங்கிக்கோ.

**முருகன்** :- என்னம்மா நீ சொல்லுறத கேக்கமாட்டியாம் ஆ.....

(என்றவாறு சியாந்தின் கையிலுள்ள காசினை வாங்குகின்றார் முருகன்)

**சிவகுமார்** :- சரி அப்போ நாங்கள் போட்டுவாறம்.

**சியாந்** :- ச ரி மாமா.

(சிவகுமார், முருகன் இருவரும் மேல் வலத்தால் சென்று மறைகின்றனர்)

**சிவகாமி** :- சியாந். நீ ரியூசனுக்கு போகாம படிப்பியா?

**சியாந்** :- அம்மா என்னால முடியும். நம்புங்கோ.

**சிவகாமி** :- சரியப்பன் நீ படிச்சு நல்ல நிலமைக்கு வந்தா அதுவே எனக்கு காணும்.

**சியாந்** :- அம்மா உடம்பு கொஞ்சம் வலிக்குது. போய் படுக்கிறன்.

**சிவகாமி** :- சரி வா அம்மா கூட்டிக் கொண்டு போறன்.

(சிவகாமி சியாந்தினை தாங்கியவாறு மேல் வலத்தால் சென்று மறைகின்றாள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10 வருடங்களின் பின்னர் சரியான வழிகாட்டல்களுடனும் தனது விடாமுயற்சியின் காரணமாகவும் அரச தொழிலான ஆசிரியர் தொழிலுக்கு வருகின்றான். தற்போது விஞ்ஞான ஆசிரியராக கடமை புரிகின்றான்)

## காட்சி 03

| | | |
|---|---|---|
| **நேரம்** | :- | பாடசாலை |
| **இடம்** | :- | காலை 9.30 மணி |
| **பாத்திரங்கள்** | :- | சியாந், சவளர்ந்த பருவம், நிலக்ஷன், கவின் |

(மணியோசை கேட்க முதல் பாடத்தினை முடித்துக்கொண்டு சியாந் மேல் வலத்தால் வருகின்றான்.)

**சியாந்** :- அடுத்தது பாத்தாமாண்டுக்கு பாடம். கெதியா போகோணும்.

(மேல் இடத்தால் நிலக்ஷன். கவின் இருவரும் கை, கால்களில் கட்டுப்போட்டபடி வருகிறார்கள். இவர்கள் சியாந்தின் வகுப்பு மாணவர்கள்.)

**நிலக்ஷன்** :- டேய் கவின், சியாந் சேர் வாறார்டா.

**கவின்** :- கவனிக்காத மாதிரி போவமே?

**நிலக்ஷன்** :- வேண்டாம்டா. சேர் என்ன நினைப்பார்?

**கவின், நிலக்சன்** :- குட் மார்னிங் சேர்

**சியாந்** :- குட்மோர்னிங், என்னடா இது கால்ல கட்டு போட்டிருக்கு ரெண்டு பேருக்கும்.

**கவின்** :- சின்ன அக்சிடன்ற் சேர்

**சியாந்** :- இவளா பெரிய கட்டுகளா இருக்கு. சின்ன அக்சிடன்ர் எண்டு சொல்லுற?

**நிலக்ஷன்** :- இல்ல பைக் ஓட்டிட்டு வந்தா காலையில உற்சாகமா படிக்கலாம் எண்டு நினைச்சு பைக் ஓடினாங்கள்.

**கவின்** :- கன்றோல் மிஸ்ஸாகி சுவரில இடிச்சிட்டம்.

**சியாந்** :- ஏன்டா படிக்கிற வயசில இதயெல்லாம் ஓடுறீங்கள்?

**நிலக்ஷன்** :- ஆசையா இருந்திச்சு சேர்.

**சியாந்** :- இந்த வயசில எதக்கண்டாலும் ஆசை வருந்தான்.

**கவின்** :- ஓடப்பழகினா தான் இப்ப மரியாத.

**சியாந்** :- டேய் உங்கட கதை என்ர சின்ன வயச ஞாபகபடுத்துது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலக்ஷன் :- என்ன சேர் சொல்லுறீங்கள்?

சியாந் :- நானும் முந்தி உப்பிடி பைக் ஓடி அக்சிடன்ற் பட்டனான். அப்ப எனக்கு பதினாறு வயசு.

கவின் :- அப்பிடியா சேர்!

சியாந் :- ஓம். இப்பிடி சின்ன வயசிலேயே பைக் ஓடத்துவங்கினா படிப்பில எப்பிடி ஆர்வம் வரும்?

நிலக்ஷன் :- படிக்கிறத விட பைக் ஓட்டுறது ஜாலியா இருக்கு சேர்.

சியாந் :- அப்பிடி இல்ல நிலக்ஷன். பைக் ஓட்டுறத எப்பிடி விரும்பி செய்யிறியோ அப்பிடி படிக்கிறதிலயும் ஆர்வம் காட்டு.

கவின் :- முயற்சி செஞ்சு பாக்கிறன் சேர்.

நிலக்ஷன் :- அப்ப பைக் ஓட்ட வேண்டாம் எண்டும் சொல்லுறீங்களே?

சியாந் :- அப்பிடி இல்லை. இதுக்கான வயசு வந்தாப் பிறகு லைசன்ஸ் எடுத்திட்டு பைக் ஓடலாம்.

கவின் :- அப்ப நாங்கள் வெயிற் பண்றம் சேர்.

சியாந் :- நல்ல முடிவு கவின். நீங்கள் அடுத்த வருசம் ஓயெல் எடுக்கோணும். சோ போக்குவரத்தில கவனமா இருக்கோணும்.

நிலக்ஷன் :- நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்குது சேர்.

கவின் :- இனிமேல் றோட்ல அப்பா, அம்மாவோட பைக்ல போற எண்டாலும் ஹெல்மட் போட்டுக்கொண்டுதான் போவன்.

சியாந் :- அது மட்டும் இல்லாம அப்பா, அம்மாவுக்கும் றோட் றூல்ஸ் பற்றி நீங்கள் சொல்லிக்குடுக்கோணும்.

நிலக்ஷன் :- எவளவு அவசரம் எண்டாலும் வேகமா போகக் கூடாது.

கவின் :- சரியா சொல்லுறா நிலக்ஷன்.

சியாந் :- எங்கு போகோணும் எண்டாலும் வெள்ளன வெளிக்கிட்டு ரென்சன் இல்லாம போகோணும்.

நிலக்ஷன் :- ஓம் சேர்.

சியாந் :- அதால இனிமேல் ஹெல்மட் போட்டுக்கொண்டு அவசரமில்லாம ஆறுதலா வண்டிய ஓட்ட வேணும். வீதி ஒழுங்குகள கடைப்பிடிச்சு சிக்னல் லைட்டுகளில் நிண்டு அவதானமாக போகோணும்.

நிலக்ஷன், கவின் :- இனி மேல் நாங்கள் கவனமா இருப்பம் சேர்.

(இவ்வாறு பாத்திரங்கள் உறை நிலையில் நிற்க கீழ் வலத்தில் இருந்து சிறுவர்கள் வந்து பாடல் இசைக்கின்றனர்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சியாந் கவிதையைக் கூற மாணவர்களும் கூறுகின்றனர்)

படிக்கும் பிள்ளைகள் நாம்.....
நாடிப் படித்திட வேண்டும்.......
சட்ட விதிகள் மதிக்கும்.....
நற் பிரஜை ஆவோம் நாம்....
சிறப்பாய் படித்து
அழகாய் உயர்ந்து
அதன் பின் வாகனம் செலுத்த வேண்டும்......
ஒழுங்காய் இருப்போம்
சிறப்பாய் வாழ்வோம்.

(கவிதை முடிந்ததும் பின்னணியில் ஒரு குரல் ஒலிக்கிறது.)

(பார்த்தீர்களா சபையோர்களே, சட்டங்களை நாம் மீறுவதனால் தான் விபத்துகள் ஏற்படுகின்றது. எமக்கென உருவாக்கப்பட்ட வீதிச்சட்டங்களை நாம்தான் கடைப்பிடிக்க வேண்டும். எங்கு சென்றாலும் சீக்கிரமாக புறப்பட்டு அவசரமில்லாமல் சென்றால் விபத்துக்களை குறைக்கலாம். சிறுவர்களுக்கு பலன்ஸ் மிஸ் ஆவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு. அதனால் வளர்ந்த பின் போக்குவரத்தில் தனித்து ஈடுபடலாம். நாமும் வீதி ஒழுங்கை கடைப்பிடித்து வாழ்வோம்.)

(திரை மூடப்படுகின்றது)

**பு. கிருஷாலி**
11D



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனி என்னவாகும் வாழ்க்கை?



மனிதம் மடிந்து விட்ட
காலமதில் நம் வாழ்க்கை
கலியுகத்தின் விந்தைகள்
நிறைந்த இந்த வாழ்க்கை

நடை பேசி நமை ஆளும்
நாகரீக வாழ்க்கை – அதில்
குஞ்சென்றும் மூப்பென்றும்
மூழ்கிப் போகும் வேடிக்கை வாழ்க்கை

ஓடியாடி விளையாட
ஓய்ந்து போன வாழ்க்கை
உடல் உழைப்பு ஏதுமில்லா
சோம்பேறி வாழ்க்கை

வலைத்தளத்தில் மாட்டிக கொண்ட
மானிடரின் வாழ்க்கை
மாற்றுவழி ஏதுமின்றி – அதில்
மாண்டு விட்ட வாழ்க்கை

அப்பு ஆச்சி வாழ்ந்துவிட்ட
அழகான வாழ்க்கை – அது
சுற்றம் சூழ வாழ்ந்திருந்த
சுகமான வாழ்க்கை

தொலைக்காட்சிப் பெட்டிக்குள்ளே
தொலைந்து விட்ட வாழ்க்கை
வீட்டுக்குள்ளே சிறைப்பட்ட
சீரழிந்த வாழ்க்கை

வசதிகள் நிறைந்து விட்ட
வளம் செறிந்த வாழ்க்கை

வாழும் காலம் குறைந்த விட்ட
வளம் கெட்ட வாழ்க்கை
புற்று நோய் தொற்றா நோய்
பயமுறுத்து வாழ்க்கை
உடலில் கொழுப்பேறி
மடிந்து விடும் குறைவான வாழ்க்கை

இயந்திர மயமாகி விட்ட
இவ்வுலக வாழ்க்கை - இதனால்
இழந்து விட்டோம் நம்முடைய
இயல்பான வாழ்க்கை

இனத்திற்கும் மதத்திற்கும்
சண்டையாடும் வாழ்க்கை
ஆவி உடலில் பிரிந்த பின்னே – பிடி
சாம்பர் ஆகும் வாழ்க்கை

யுத்தங்களால் இரத்தங்கள்
சிந்திவிட்ட வாழ்க்கை
இனி வேண்டாமே சந்ததிக்கு
இப்படியொரு வாழ்க்கை

போட்டியும் பொறாமையும்
நிறைந்த உலக வாழ்க்கை
அதில் நல்லர்க்கு மட்டுமே
போராட்ட வாழ்க்கை

பிறப்புக்கும் இறப்புக்கும்
இடையில் ஒரு வாழ்க்கை
முடிந்தவரை வாழ்ந்து விடு - இது
உன்னுடைய வாழ்க்கை

இது இருபத்தோராம் நூற்றாண்டின்
இழிவான வாழ்க்கை
இனி என்னவாகும்
வருங்கால மானிடரின் வாழ்க்கை!

**வி. பிரியங்கா**
தரம் **13A,** கலைப்பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வு



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# USES OF TREES



Trees give us life and really very important for the survival. Paper industries, rubber industries, match industries, etc are totally depend on trees. The main role of trees is giving fresh and oxygenated air to us and consumption of $Co_2$. They also give protection, shadow, food, source of money, home, medicines, etc to the people.

Trees are the sources of rain on the earth as they attract clouds which ultimately bring rain. They keep environment fresh by preventing from pollution. Trees are very helpful and useful friends of humanity. Trees are precious gift to our life from the nature. They are the green gold on the earth and very important for everyone's life.

Trees act as natural dustbins to the harmful gases in the environment. They keep us healthy by lowering the dust levels and pollution levels especially in the urban areas. They help in reducing noise pollution and most effective as sound barriers.

Trees are nourishing life on the earth in many ways by providing fruits, vegetables, foliage, flowers, spices, cool shade, medicines, roots, bark, wood, spouts, etc.

One fully grown tree may serve humanity for many years without getting anything in return. They prevent us from many diseases by purifying the air, maintaining the ecological balance providing medicine etc. We should promote new planting in our surroundings.

Thank you.

**Navascan Nathy**
6A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My school



My school name is Chavakachcheri Hindu College. It is situated at Chavakachcheri. The atmosphere in which our school situated is very pleasant. Many students from our school have occupied, glorious position in our country. This is a mixed national school There are hundred teachers are in our school. All the teachers are experienced and trained.

Our school principal is Mr. N. Sarveswaran. He is a good administrator. He maintains strict discipline in the school. There are science laboratory, technological laboratory, main hall and an assembly hall in my school. There are classes up to 6-13. My school celebrates many events like Prize Giving, Navarathiri, Thaipongal are some of them. I love my school very much.

Thank you.

**Lawvence Piravinth**
**7B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DON'T LITTER



A waste is known as the things which won't be used anymore. Our Global is changing day by day. Many changes have come in our culture, life style, habits, technology etc. In day to day life according to our needs and life styles we use a lot of things and put away a lot of waste which included various types of substances like plastic, paper, clothes, etc. But we never think about what will happen to those waste and consequences which is becoming a big issue in the world nowadays as they pollute almost all the land, water and air.

The waste products can be divided into two types such as organic and inorganic waste. Nowaday many scientific researches proved that the inorganic waste like plastic affect the human beings and almost all other living organism especially in the ocean.

The waste which were thrown into canals or other water resources prevent the natural way of water path and accumulation of water result in increment of mosquitoes and lead of several diseases. In addition dumbing these waste also cause increase in green gases which lead to global warming. If it is continuing to increase the accumulation of waste, then definitely the life of the human begins will be a question in future.

So by considering these issues we have to find out the solutions for the problems arise from the waste such as conduct the awareness programmes among people, avoid of using some inorganic things, using separate dust bin in disposing the waste etc.

So, since the wastes are inevitable for our life. We have to resulate our activities to dispose the garbages in proper ways by considering these issues.

Thank you.

**Ratnaruban Vibushananth**
**8B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HEALTH IS WEALTH



As we all live in super-fast, crowded and busy time period. We have to perform multiple tasks throughout the day in order to earn more money. However we forget that good health is as necessary for our healthy life. We forget to take proper food in timely manner, daily exercises, proper rest, etc to just earn some false wealth. We should never forget that our health is a real wealth of the life. It is true for all that Health is Wealth.

A good health reduces the stress level and promotes healthy life without sufferings. We should always be aware of our health and go for regular health check-up. We should eat balanced food having fresh fruits, salad, green leafy vegetables, milk, egg, Dhal etc. A good health needs daily physical activities, proper rest and sleep, cleanliness, healthy environment. Maintaining a good health is a good habit which should be practised from child hood with the help of parents.

In earlier days, life was not so hectic. Now, life in the technological world has become easy and comfortable but hectic because of the competitions. Now-a-days, easy life is not possible as, everyone wants to earn more money to get better life than others. People have to work for at least 9 to 10 hours in the offices by just sitting on the chair without any physical movement. In this way, they live their daily routine only to earn money and not their life for themselves. It is very necessary to earn money for fulfilling some basic needs however, it is also necessary to live a healthy and peaceful life which needs a good health. So maintaining good health habits is the most precious gift of the life.

Thank you.

**Jeyakumar Sharumathy**
**9F**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NO WATER! NO LIFE! DON'T WASTE WATER



There are main needs for humans and other organisms to survive. Air, water and food are them. Among these, water contributes immensely in the existence of life on the earth. We can't live without water. Water is used for many daily purposes and economic purposes.

From birth to death, a person depends on water. A child is natured in a sac of water in the womb of mother. Then it needs water to drink, play and bathe. Water is used to wash cloths. It is used for marine transportation. It is a colourless, odourless and fasteless liquid. It can exist in three states of matter solid, liquid and gas. The chemical formula of water is $H_2O$. It means that 2 hydrogen atoms are combined with an oxygen atom to form a water molecule.

It is an important element of commercial and industrial development. It is essential for the existence of plant and animal life. Rainfall is important for cultivation. Adequate amount of water is needed for good yield.

But nowadays, water is wasted in many ways. People don't use the water properly. We currently use more than half of the world's supply of surface water and could be using as much as 90% by 2005. We withdraw this water from rivers lakes and aquifers Chemical wastages of factories are mixed with water and it becomes polluted. Further, people throw dead bodies of animals into the water bodies. It causes water pollution. Further during marine transportation, chemical substances like oil are evolved. This makes the water polluted.

To avoid the water pollution we can take several measures. We can recycle the water. We can supply bathing water to plant. We should avoid throwing waste materials into water bodies. We should extract factory waste properly without polluting water.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

There are many legislations and laws by the governments to protect water. United Nations says that the 3rd world war will occur for water. It is true because we use water without a level. So, the percentage of water in the earth is decreasing by 2030 water is a threa0t for survival.

So we should use water property. We should avoid wasting water. We should do our best to protect water. There are many people around the world die every year without water. These types of problems commonly occurs in African countries.

Thank you.

**Sribalakrishnan Vanoja**
**10D**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHILD ABUSE



Child abuse or child maltreatment is physical, sexual and psychological neglect of a child. This abuse can occur in a child's home, organizations school or communities also. In our present day, this is one of the severe threat to our would, I think the main reason for this child abuse is selfishness of the common group of people.

When we look at the child abuse in the physical way they happen in various forms. Many children face many challenges for their survival. In many places child dignity is prohibited by hitting beating scolding and poisoning. We can see many child labours in many countries. This is because of the selfishness of businessmen and their malicious and terrible heart. On the other hand, many children become labour because of poverty. In many places, father is a special needed one or parents are dead. So children become as a breadwinner and earn to live. Child labours are treated as slaves or animals. This is totally against their child rights. Every child has rights to study, to live with their parents and no one can't neglect their rights.

In some places, children face many sexual harassments. This is not a good thing to a growth of a nation. Children also affect in a psychological way like speaking degrading words. Children become isolated because of child abuse. Nation's future is depend on child's growth. So when they underestimate by these kinds of actions, nation will surely ruin.

Everyone should give their hands to prohibit this child abuse. Every nation should create severe laws to act against this abuse. Every children should treat as their own children. Because of these precautious activities, we can save our child. Otherwise our future generation will ruin by these child abuses. When there isn't a proper guidance to a child he will become as an ill bred man in future. This is not his fault. Our society makes the child as this. In this world, everyone has rights to live a peaceful happy life.

Everyone is responsible for this child abuse. We may see a child abuse in front of our eyes, but we won't do anything because everyone thinks, that child is not my child. This weakness of human makes many children to ruin their life. We should do anything to against it. "Once swallow doesn't make a summer" like wise, only your own child's freedom is not the all children's freedom.

**Shobithan, Grade 11B**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PROS AND CONS OF USING SOCIAL MEDIA



In this 21st century, technology is getting high speed growth day by day. So we can't survive in this world without balding the hands of technology. In fact social media is also a part of the development of technology. That's why people are in the situation of using it, either with or without their willingness. The impact of using social media, in this society is remarkable nowadays. It has many positive effects and as well as some negatives too.

The usage of social media has a lot of pros in many ways. The most important purpose of social media is to combine people in many parts of the world and make them as one family. Face book, viber, whatsapp, snapchat, instagram, linked in etc are some well know examples of social media. The significant feature of these plat forms is face to face interaction.

Messaging on social media sites can make the situation much easier when plans are made via the sites. Even social media increases voter participation and facilitates political changes. Moreover it helps to reduce loneliness of senior citizens who are socially isolated. During the crisis events, it allows for quick diffusion of public health and safety information. Professional networking sites like LinkedIn greatly assist companies to find job seekers and personnels for the vacant jobs.

Social media provides academic research to a wider audience, allowing people access to previously inaccessible educational resources. It can act as a great study tool for students. They can use it to ask difficult questions that they could not solve on their own. Social media also makes it easier to form; group discussions and study groups even when they are far from each other students can also post research work on social media platforms to educate other students on a particular topic.

Teenagers are the ones who get more advantages of social media as they use them regularly. Every teenager is a member of one or more social media platforms. Social media tends to form an integral part of their life. Through these social media they become more informed about current affairs. With



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the help of social media, teens can easily find out about what's going their neighborhood, school, state, country and even in the entire world. It's an important way to equip themselves with adequate knowledge of current affairs. This information can be quite useful and enables them to make informed decisions based on what they know.

Social media provides a place where teens can freely express themselves. They can join groups and fan pages that they are interested in and which reflect their own unique personality. This empowers them and makes them know that their opinion counts. It boosts their self esteem. Many times, teens with disabilities do not get an equal chance to interact with others. However, social media offers equal opportunities to all. So they can do all of their activities that their fellow teenagers do on social media. This makes them feel that they actually belong and realize that they are not different at all.

We all have to admit that this is the age of raped technological advancement. When people use social media, they embrace the technology that is widely available and use it for their own good. It is good for them to keep up with the changing trends in technology. But sometimes it causes some negative effects on people. So we can't fully ignore the cons of social media. We can't make a good use of social media unless we know the negative impacts of it. So let's have a look on it.

Very importantly we have to consider one thing. Social media posts cannot be entirely deleted. For example if you post a story on your face book and then remove it, that doesn't mean it's completely deleted! The main face book sever still has your post saved in it. At this point your privacy is actually questioned. Even the usage of social media is associated with brain and personality disorders. Students, who are heavy social media users, tend to have lower grades in their studies. Social media can exacerbate feelings of discontent and put children at higher risk for anxiety, depression, low self-esteem, eating disorders and even suicide. Criminals can use social media to commit and promote crimes. During the last Sri Lankan terrorist attack, terrorists' used Skype to plan the bomb blasts.

These social media mainly target the teenagers and mainly affect them so much. They are the great divertion of mind for the teens in the current situation. Cyber bullying is one of the most negative influences that present itself in social media especially for teenagers. It is easier to bully others through social media than do physically. Due to the huge level networking



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

offered by social media, cyber bullying move bad to worse in a matter of days causing long lasting pain. Teen with disabilities can become a target of prejudice from their fellow teens. This can make them feel isolated and very lonely. The situation is made worse by the fact that many teenagers will often carry on with their online attitudes even when they are interacting face to face. This makes them more deserted from the real world.

Social media is very engaging and leads teenagers to spend a lot of time on it. So they may neglect their school work, extra-curricular activities and even their friends and family so that they can play a game or chat about various unimportant things. This clearly reduces their productivity levels. Such kids even start failing in school work and may end up being addicted to the social media platforms.

Due to the increase of spending time interacting in the virtual world of social media, it affects the face to face communication and social skills of teenagers. You can find very out spoken kids on social media being quite reserved when it comes to face to face interactions, knowing where to hold our hands and what kind of facial expression to hold are something that comes from direct conversations.

Apart from the teens, to all the people who use social media, it can be a drain on time and use up hours that you can't get back. Clinical psychologist and author of "The Teen Girl's survival Guide" Dr.Lucie Hemmen writes that. "Most people experience huge benefits from taking a social media break. There is a way in which cultivating and maintaining your online identity can replace an authentic connection to your true self. The more grounded you are in your authentic value as a human being the less likely you are to be a heavy user of social media and also to be negatively affected by it."

So the pros and cons of social media actually depend on how we use it. If you know that your value is deeper and more complex than what you post and how many likes and comments you receive, then you are probably a great social media user.

**Miss. Vyshali Punithanathan**
**12 Bio**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியாத் தடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ச.சதீஸ்குமார்

எமது பாடசாலையை ஒளியூட்ட ICT ஆசானாக **16.06.2009** அன்று முதல் நியமனம் பெற்று யா / சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு வந்தவரே சண்முகராசா சதீஸ்குமார்.

கற்பித்தலின் மூலமும் ஆளுமையின் மூலமும் இலகுவாக மாணவர்கள் மனதில் அழியாத் தடம் பதித்தார். குறிப்பாக தரம் **10, 11, 12, 13** ஆகிய வகுப்புகளுக்கு ஐஊவு பாடத்தையும் **12, 13** ஆகிய வகுப்புகளிற்கு G.I.T பாடத்தையும் கற்பித்து மாணவர்களை சிறந்த பாதையில் இட்டுச் சென்றார். இவர் நியமனம் பெற்று வந்த காலத்தில் இப் பாடசாலையில் I.C.T பாடத்தையும் இப் பாடத்தின் முக்கியத்துவத்தையும் அறியாததால் I.C.T பாடத் தெரிவு செய்து சித்தி அடைவோர் குறைவாகக் காணப்பட்டது.

சதீஸ்குமார் ஆசிரியர் அவர்களின் வருகைக்குப் பின் I.C.T பாடத்தை தெரிவு செய்து சித்தி அடைவோர் எண்ணிக்கை சமகாலத்தில் சடுதியாக அதிகரித்தது. அதனால் இவரது பணியை பர்த்து வியந்தவர் பலார், வியக்காதவர் இவர். மாணவர்களுக்கு மட்டுமன்றி பாடசாலைச் சமூகத்திற்கும் செய்த பணிகள் பல.

அவற்றுள் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை, பாடசாலை நேரசூசியை தயாரித்து வழங்கியமை. இணையத்தளத்தை உருவாக்கி I.C.T பாடத்தை முதன்மைப்படுத்தியமை.

வருடாந்த இடமாற்றம் காரணமாக சதீஸ்குமார் அவர்கள் **01.03.2019** அன்று மானிப்பாய் இந்துக் கல்லூரிக்குச் சென்று அங்கு தனது பணியை தொடர்ந்தார். அங்கிருந்து I.C.T பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகராக பதவி உயர்வு பெற்று தென்மராட்சிக் கல்வி வலயத்தில் தனது பணியை தொடர்கிறார். அவரது பணி மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஜனார்த்தன்,**
ஆசிரியர்

## சீ. அமர சோதி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி பௌதீகவியல் பாட ஆசிரியராக **2014**ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்தார். இவர் கல்லூரியில் ஆரம்பத்தில் பௌதீகவியலை கற்றுவந்ததோடு கீழ் பிரிவு மாணவர்களுக்கு செயன்முறை தொழிநுட்பத்தையும் கற்று வந்தார்.

இவர் இசை, நாடகம் நடிப்பதில் வல்லவராகவும், பேரவா உடையவராகவும் விளங்கினார். அத்தோடு மேடைப்பேச்சுக்கள் பட்டிமன்றங்களும் செய்துள்ளார். இவர் வருட இடமாற்றத்திற்கு அமைவாக **2019** ஆண்டு யா/நெல்லியடி மத்திய கல்லூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்குச் சென்றுள்ளார். இவரது ஆசிரியப் பணி கலைப்பணி சிறப்புற அமைந்து சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ இறைவனின் அருளை வேண்டிநிற்கின்றேன்.

**சீ. விஜயகாந்தன்**
*ஆசிரியர்.*

## திருமதி டி. சுபாஷன்

திருமதி டிலக்ஷா சுபாஷன் 06.10.2016 அன்று தொடக்கம் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப பாட ஆசிரியராக எமது பாடசாலையில் முதல் நியமனம் பெற்று பணியாற்றினார்.

இவர் இடைநிலை மாணவர்களுக்கு ICT பாடத்தினையும் உயர்தர மாணவர்களுக்கு GIT பாடத்தினையும் சிறப்புடன் கற்பித்து மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அரும் பங்காற்றினார்.

தமக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை மன மகிழ்வுடன் ஏற்று செவ்வனே நிறைவேற்றுவார். சக ஆசிரியர்களுடன் அன்பாகவும் நட்புறவுடனும் பழகுவார். இவர் இருந்த காலப்பகுதியில் வெளிவந்த தாமோதரன் இதழின் அங்கத்தவராகவும் செயற்பட்டவராவார்.

மாணவர்களை போட்டிகளுக்கு அழைத்துச் செல்வதிலும் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்வதிலும் ஒரு போதும் பின்னின்றதில்லை.

இவர் 28.02.2019 ல் கொ/பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்கு இடமாற்றமாகிச் சென்றுள்ளார். இவரது பணி தொடரவும் சகல நலன்களும் பெற்று வாழவும் இறையாசி வேண்டுகின்றேன்.

**திருமதி மதிராஜ்,**
*ஆசிரியை.*

## திருமதி தர்சா சதானந்தன்

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு திருமதி தர்சா சதானந்தன் 2017.10.23ம் திகதி முதல் நியமனம் பெற்று வந்தார். இவர் தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களுக்கு தகவல் தொழிநுட்பப் பாடத்தையும், தரம் 12, 13 மாணவர்களுக்கு பொதுத் தகவல் தொழிநுட்ப பாடத்தினையும் சிறப்புறக் கற்பித்தார். இவர் உள்ளத்தில் மென்மையும், குணநலத்தில் நெகிழ்ச்சியும் உடையவர். தான் கடமை புரிந்த காலம் மிகக் குறைந்த காலத்தினுள்ளே தனக்கென ஓர் இடத்தை இங்கு தக்க வைத்துச் சென்றுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் பாடசாலை நிர்வாக சேவைகளுக்கு உதவியதுடனும் சக ஆசிரியர்களுடன் அன்பாகவும், பண்பாகவும் பழகுபவர். இத்துடன் பாடசாலை நலனிலும் மாணவர் நலனிலும் அதிக அக்கறை கொண்டவர். தமது பாடத்துறைக்கு மட்டுமல்லாது எமது பாடசாலையில் பல பணிகளை ஆற்றியுள்ளனர். குறிப்பாக கபடி அணி மாணவர்களை மாகாணமட்டப் போட்டிக்கு வ/ஓமந்தை மத்திய கல்லூரிக்கு மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளார். மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு மாணவர்களை அழைத்துச் சென்றது மட்டுமல்லாது யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி சார்பாக ஆசிரியர்களுக்கான பலூன் உடைத்தல் போட்டியில் கலந்து கொண்டு 2ம் இடத்தை பெற்று எமது கல்லூரிக்கு பெருமையை ஈட்டித்தந்துள்ளார்.

இவ்வாறு தன் பாடச் செயற்பாட்டுக்கு மேலாக இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பங்கு பற்றியது குறிப்பிடத்தக்கது. இவர் எமது பாடசாலையில் இருந்து இடமாற்றம் பெற்று கிளி/மத்திய கல்லூரிக்கு சென்றுள்ளார். இவரது பணி அப்பாடசாலையிலும் சிறந்து விளங்க எல்லா நலமும் பெற்று சிறப்பாக வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

**செல்வி. த. சுலக்சனா,**

ஆசிரியை

## செல்வி உஷா சிவகுருநாதன்

கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பட்டத்தைப் பெற்று 15.06.2007 இல் நியமனம் பெற்ற விஞ்ஞான பாட ஆசிரியராவார். இவர் 2018 ஆம் ஆண்டு இடம் பெற்ற ஆசிரியர் சேவையில் இடமாற்றக் கொள்கையினூடாக 05.04.208 இல் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டார். இவ் இடைநிலை பிரிவு மாணவர்களுக்கு விஞ்ஞான பாடத்தினையும் சுகாதார பாடத்தினையும் மிகவும் சிறப்பாக கற்பித்தவராவார். மேலும் இல்ல விளையாட்டுப் போட்டிகளிலும் முன்னின்று செயற்பட்டதோடு சுற்றாடல் குழு உறுப்பினராகவும் செயற்பட்டு தனது சேவையை சிறப்பாக ஆற்றியுள்ளார்.

இவர் தனது சுயவிருப்பின் படி மீண்டும் 21.02.2019இல் யா/மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவரது சேவை மேலும் சிறக்க வாழ்த்துவதுடன் இறையருளையும் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**திருமதி சிவனேசன்,**

ஆசிரியை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துவின் ஏற்றத்திற்கு
# வித்திட்ட முத்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுரம் கயிலேஸ்வரன்

தன்னலங்கருதாது கல்விப்பணிபுரிந்த உயர் மனச் செம்மல்கள் வாழ்ந்து மறைந்த தென்மராட்சி மண்ணிலே, கற்றோர் நிறைந்த நுணாவில் என்னும் பகுதியிலே திரு.திருமதி வல்லிபுரம் தம்பதியினரின் அருமை மகனாக **21.02.1747**ல் பிறந்தவர் திரு.வ.கயிலேஸ்வரன் அவர்கள்.

கால ஓட்டத்திலே வளர் பிறையென வளர்ந்து தனது ஆரம்பக் கல்வியை யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும், தொடர்ந்த கல்வியைப் புத்தளம் சாகிராக் கல்லூரியிலும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்திலும் பெற்றார்.

தனது இருபத்தோராவது வயதில் **01.11.1968**இல் புத்தளம் கரத்தீவு முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியில் இவர் அடியெடுத்து வைத்தார். தொடர்ந்து **1970**ல் கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் தொழிற்றகைமை பெற்று **1972**ல் ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் சேவையாற்றினார். அதன் பின் **1975**ல் புத்தளம் கற்பிட்டி அல்அக்ஷா வித்தியாலயத்தில் தன் கல்விப் பணியினைத் தொடர்ந்தார்.

இந்நாளிலே புத்தளம் மண்ணிலே சைவசமயத்தைப் பின்பற்றும் பிள்ளைகள் சைவமணங்கமழும் சூழலிலே கல்வி பயில வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றிருந்தது. தீவிரமடைந்த கோரிக்கை வெற்றி பெற்ற பொழுது புத்தளம் இந்து தமிழ் வித்தியாலயம் புத்தளத்திலே நிமிர்ந்தெழுந்தது. அப்பாடசாலையின் முதலாவது அதிபராக **23.01.1979**ல் இவர் பொறுப்பேற்றார். பல்வேறு நெருக்கடிகளைப் புத்தளம் தமிழ் வித்தியாலயத்தில் சந்தித்த போதெல்லாம் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி அசைக்க முடியாத அடித்தளமிட்ட பெருமை திரு.வ.கயிலேஸ்வரன் அவர்களையே சாரும்.

இன்று வடமேல் மாகாணத்திலே 1யுடீ தர பாடசாலையாக மிளிருகின்ற புத்தளம் இந்து தனது இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது முதலாவது அதிபரான திரு.கயிலேஸ்வரன் அவர்களை அழைத்துக் கௌரவித்து தனது பாசப்பிணைப்பையும் நன்றியையும் பரிமாறிக் கொண்டது நெஞ்சை நெகிழ வைத்த தருணம் எனலாம்.

புத்தளம் இந்துவிடமிருந்து பிரியாவிடை பெற்ற இவர் **1985**இல் தனது சொந்த மாவட்டத்தின் சொந்தப் பிரதேசத்திலமைந்திருந்த யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தின் (தற்போதைய வீரசிங்கம் மத்திய கல்லூரி) கனிஸ்ட அதிபர் பதவியை விரும்பி ஏற்றார். அதன் பின் **1987**ல் யா/கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் அதிபர் பொறுப்பை ஏற்று அரும் பணியாற்றினார். அதே வருடத்திலே சாவகச்சேரி இந்துவில் பணிபுரியும் வாய்ப்பு இவரைத்தேடி வந்தது. அதனையேற்று இந்துவுடன் தன்னை இணைத்துக்கொண்ட போது **1987**ல் யாழ் குடாநாட்டிலேயே அதிக எண்ணிக்கையான மாணவர்களை கொண்டு விளங்கிய சாவகச்சேரி இந்துவின் நிர்வாகத்தை இலகுபடுத்துவதற்காக **27.08.1987**ல் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை தனியாகப் பிரிந்து இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது **01.09.1987**ல் சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் கனிஸ்ட அதிபராகவும் **21.08.1989** முதல் சாவகச்சேரி இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பாடசாலையின் அதிபராகவும் பணி செய்தார்.

தனது சிந்தனைத் திறனாலும், அனுபவ அறிவினாலும், பண்பான பேச்சினாலும் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் மனங்களில் நீங்கா இடம்பெற்ற இவர் பல சோதனைகள், இடம்பெயர்வுகள் மத்தியிலும் பாடசாலையைத் தளராமல் நடாத்திச் சென்று 20.02.2007இல் பணி ஓய்வு பெற்றார். நீண்ட 39 வருடங்கள் மாணவர்கள் போற்றும் ஆசானாக, புகழ் பூத்த அதிபராக பதவிகளால் பெருமை பெறும் மனிதர்கள் மத்தியில் பதவியைப் பெருமைப் படுத்திய நல்லதொரு மனிதனாக, சமூக நல ஆர்வலனாக, இறைபக்தி மிக்கவாராக வாழ்ந்து 29.12.2019ல் இறைபதம் எய்திய திரு.வ.கையிலேஸ்வரன் அவர்கள் சமூதாயத்தில் என்றும் நினைவு கூரப்படுவார் என்பதில் ஐயமில்லை.

நன்றி.

**மதிவதனி செல்வசுந்தரம்**
ஆசிரியர்

## திரு.தம்பித்துரை பாலகிருஷ்ணன்

தமிழ் மனங்கமழும் யாழ் மண்ணிலே ஊர்காவற்றுறை என்னும் பெருமை பெறும் இடத்திலே, சீர் பெறு கரம்பன் எனப்படும் பகுதியிலே வாழ்ந்த தம்பித்துரை மகேஸ்வரியின் நான்காவது மகனாகப் பிறந்து வளர்ந்தவர் திரு.த.பாலகிருஷ்ணன் அவர்கள்.

யாழ் மத்திய கல்லூரியின் மாணவனான இவர் யாழ் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி பட்டம் பெற்றவர். இதன் பின் திருமண ஏற்பாட்டின் விளைவாக எமது தென்மராட்சி அவருடைய வாழிடமாயிற்று. 1980 களில் பளை மத்திய கல்லூரியில் (அன்றைய பளை ம.வி) வணிக பாட ஆசிரியராக அறிமுகமான இவர் 1990ல் சாவகச்சேரி இந்துவில் வணிக ஆசானாக வரவேற்கப்பட்டு பணி ஓய்வு பெறும் வரை அயராது உழைத்தார். தனது கணீரென்ற குராலாலும், வணிக பாடத்துறையில் பெற்றிருந்த அதீத அறிவினாலும், தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்கும் ஆர்வமிகுதியாலும் வணிகக் கல்வி பயிலும் மாணவர்களைத் தன்பக்கம் இழுத்து தொழில்துறை வழிகாட்டலிலும் அவர்களுக்கு உதவியதை அவருடைய மாணவர்கள் என்றும் நினைவு கூருவார்கள்.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் வணிகத்தறை வளவாளராகவும், பரீட்சை ஆலோசகராவும் பணிபுரிந்து இவர் ஆற்றிய சேவைகள் அதிகம். வணிகத்துறை சார்ந்த புத்தகங்கள் எழுதிய பெருமையும் இவருக்குண்டு.

தமது மாணவர்களினால் பாலா சேர் என அன்புடன் அழைக்கப்பட்ட இவர் பொருளாரதார நிலையில் பின்தங்கிய பிள்ளைகளை இனங்கண்டு உதவிக்கரம் நீட்டத் தயங்காதவர். சமயத் தொண்டுகளில் ஆர்வம் மிகுந்த சைவப்பற்றாளரான இவர் சைவ பரிபாலன சபையின் ஆயட்கால உறுப்பினராக இணைந்து பணிபுரிந்தவர். சமூக சேவை ஆர்வலரான இவர் சமாதான நீதவான் என்ற தகுதியையும் பெற்றுகொண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணியிடங்களிலே சவால்கள் பலவற்றை எதிர்நோக்கிய போதிலும் பாடரீதியாகத் தனக்கெனத் தனியிடத்தையும், மாணவர்கள் மனங்களிலே மதிப்பையும் அன்பையும் பெற்றவராகத் திகழ்ந்து 12.02.2019ல் இறைபதம் எய்திய திரு.பாலாசேர் அவர்களை இந்துக் கல்லூரி நன்றியுடன் நினைவு கூருகிறது.

நன்றி

**மதிவதனி செல்வசுந்தரம்**
ஆசிரியர்

## பிரதி அதிபர் அமரர் திரு.ந.பாலச்சந்திரன்

கலைப்பட்டதாரி நியமனத்தில் தனது அசிரியப் பணியை 05.08.1984 இல் ஏற்ற திரு.நடராஜா பாலச்சந்திரன் அவர்கள் எமது கல்லூரிக்கு 1989.08.05 நுவரெலியா நாகல வித்தியாலயத்தில் இருந்து மாற்றலாகி வந்தார்.

ஆரம்பத்தில் சமூகக் கல்விப் பாடத்தை திறம்படக் கற்பித்தார். பின்னர் உயர்தர வகுப்புகளிலும் இடைநிலை வகுப்புகளிலும் புவியியல் பாடத்தை தனக்கே உரிய பாணியில் கற்பித்து வந்தார். தனது அறிவினை விருத்தி செய்யும் முகமாக PGDE கற்கையையும் பின்னர் 2006 இல் ஆநுனு கற்கையையும் யாழ் பல்கலைக் கழகத்தில் பூர்த்தி செய்தார்.

எமது கல்லூரியின் கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்க செயற்குழு உறுப்பினராக 2004 இலும் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினராக 2007 இலும் துணை அதிபராக 2008 இலும் பிரதி அதிபராக (நிர்வாகம்) 2009 தொடக்கம் 15.10.2015 ஓய்வு பெறும் வரை பல பதவிகளை வகித்து தனது நிர்வாகத் திறமையை வெளிப்படுத்திய பல்திறன் உடையவர்.

மேலும் வாசகர் வட்டத்தின் துணைக்காப்பாளராகவும் பழைய மாணவர் சங்க உபதலைவராகவும் மாணவர் முதல்வர் சபையின் பொறுப்பாசிரியராகவும் கடமை ஆற்றி 'முதன்மை' எனும் சஞ்சிகையின் வரவிற்கு வித்திட்டவர் இவரே.

பிரதி அதிபராக இருந்த காலத்தில் ஒவ்வொரு நாளும் சலிக்காது வகுப்பறைகளை மேற்பார்வை செய்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்காக செயற்படுவதை உறுதி செய்வதில் வல்லவராக தொழிற்பட்டவர்.

மாணவர்கள் எந்தவொரு பாடவேளையிலும் Free ஆக இருக்கக் கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தவர்.

இவ்வாறான சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவனாக, ஆசிரியராக, துணை அதிபராக, பிரதி அதிபராக பல்வடிவங்களில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றி 60வது வயதில் ஓய்வு பெற்ற திரு.ந.பாலச்சந்திரன் அவர்கள் 2019.07.04 அன்று இவ்வுலகை விட்டும் ஓய்வு பெற்றார். இவரது அத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

**திருமதி. சசிகலா குகதாஸ்**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2019



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய ரீதியான விளையாட்டுப் போட்டியில்
## வெற்றி பெற்ற மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வின் போது










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்

| | |
|---|---|
| காப்பாளர் | - ந.சர்வேஸ்வரன் |
| பொறுப்பாசிரியர் | - திரு. நா.சசிகரன் |
| தலைவர் | -நா.அருணசங்கர் |
| உபதலைவர் | -சிந்துஜன் |
| செயலாளர் | -கு.ஹம்சா |
| உபசெயலாளர் | -ம.கீதாஞ்சலி |

பல்வேறு செயற்பாடுகளை எமது மன்றம் முன்னெடுக்கின்றது. அந்த வகையில் தினமும் காலைப் பிரார்த்தனை, வெள்ளிக்கிழமைகளில் நற்சிந்தனை என்பவற்றை ஒழுங்கு செய்து மேற்கொண்டு வருகின்றது.

அதே போன்று நவராத்திரி பூசை வழிபாடுகள், வாணிவிழா என்பனவும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அத்தோடு தமிழ்மன்றத்தோடு இணைந்து வாணி விழா மற்றும் முத்தமிழ் விழாவை முன்னிட்டு மாணவர்களிடையே கோலம்போடுதல், மாலைகட்டுதல், பேச்சு, பண்ணிசை மற்றும் விவாதம் போன்ற பல்வேறு போட்டிகளை ஒழுங்கு செய்ததோடு இந்த வருடத்தில் மாணவர்களிடையே புதிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஆங்கிலப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. இவ்வகையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வாணிவிழா, முத்தமிழ் விழா அன்று பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி ஊக்குவிக்கப்படுத்துகின்றார்கள். 2019 வாணிவிழா, முத்தமிழ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. இ. சர்வேஸ்வரா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆடிப்பிறப்பு, பண்டிகை, கார்த்திகை விளக்கீடு என்பவற்றையும் சிறப்பாக கொண்டாடி வருவதோடு நாயன்மார்கள் குருபூசை தினங்களையும் அதனையொட்டி தலயாத்திரைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

மேலும் எமது மன்றமானது அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அருகிலுள்ள கந்தசுவாமி ஆலயத்தில் மகோற்சவத்தின் 6ம் திருவிழாவை (பகல்) பொறுப்பேற்று சிறப்பாக மேற்கொள்வதோடு ஆலயத்தில் சிரமதான பணிகளையும் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறு பலதரப்பட்ட பணிகளை ஆற்றும் இம்மன்றமானது இனிவரும் காலங்களில் தன்னாலான பணிகளை மேற்கொண்டு மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களை மேன்மையுறச் செய்ய முன்னிற்கும் என்பதில் ஐயமும் இல்லை.

**நா. சசிகரன், பொறுப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மன்றம்



# தமிழ் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்ற அறிக்கை

| | |
|---|---|
| காப்பாளர் | - ந.சர்வேஸ்வரன் |
| பொறுப்பாசிரியர் | - திரு. சி.ரகுபதி |
| தலைவர் | -ம.கீதாஞ்சலி |
| உபதலைவர் | -சிந்துஜன் |
| செயலாளர் | -நா.அருண்சங்கர் |
| உபசெயலாளர் | -சி.அபிசன் |
| பொருளாளர் | -கு.ஹம்சா |

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் தமிழ் மன்றம் ஆனது உயர்தர தமிழ் மன்றம் இடைநிலை வகுப்புக்களுக்கான தமிழ் மன்றம் என இரு பெரும் பிரிவுகளாக இயங்கி வருகின்றது. இடைநிலைத் தமிழ் மன்றம் தரம் 6 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களையும் உயர்தர மன்றம் 12, 13 வரையான வகுப்புக்களையும் உள்ளடக்கி இயங்கி வருகின்றது.

இணைந்த கலைத்திட்ட செயற்பாடுகளில் மன்றங்களின் பங்களிப்பு அளப்பரியது. தமிழ் மன்றம் மாணவர்களின் தமிழ் திறன் சார்ந்த செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக விளங்கி வருகிறது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் வளர்ப்பதற்கும் மாணவர்களுக்கு பங்களிப்பை செய்கின்றது.

சென்ற வருடம் மாணவர்களின் விவாத திறனை வளர்க்கும் பொருட்டு வகுப்பு ரீதியாக விவாத போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழையும் வழங்கியது. தமிழ் தினப்போட்டிகளில் எமது மாணவர்கள் வலய ரீதியாகவும் மாகாண ரீதியாகவும் வெற்றி பெற துணை புரிந்துள்ளது.

இனி வரும் காலங்களிலும் மன்றமானது மொழித்துறை சார்ந்த விடயங்களில் முனைப்புடன் செயற்படும் எமது மன்ற வருடாந்த விழா வாணிவிழாக் காலத்தில் சிறப்பாக நடைபெறுவது யாவரும் அறிந்ததொன்றாகும். எமது மன்றத்தின் செயற் பாடுகள் வெற்றிகரமாக அமைய காரணம் தமிழ் பாட ஆசிரியர்களினதும் ஏனைய துறை சார்ந்த ஆசிரியர்களினதும் தன்னலமற்ற சேவை மனப்பாங்கேயாகும். அவர்களின் சேவை எதிர் காலத்திலும் தொடர்ந்திருக்கும் என்று பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

**சி.ரகுபதி, பொறுப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சகோதரத்துவம்

**நிர்வாக உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| **போசகர்** | - திரு. ந. சர்வேஸ்வரன் |
| **தலைவர்** | - திரு. சோ. கோகிலன் |
| **செயலாளர்** | - திரு. அ. செந்தூரன் |
| **பொருளாளர்** | - திருமதி. ர. சுசந்தன் |
| **உபதலைவர்** | - செல்வி. வி. சரண்யா |
| **உபசெயலாளர்** | - திருமதி. அ. கிருஷாந்தன் |
| | - திரு. செ. ஜெனார்த்தனன் |
| | - திரு. வி. உதேஷ் |
| | - திருமதி. வி. கௌரீஸ்வரன் |
| | - செல்வி. ச. அனோஜா |

ஆசிரிய சகோதரத்துவமானது எமது கல்லூரியின் கல்வி சார் ஊழியர்களையும் கல்வி சாரா ஊழியர்களையும் உள்ளடக்கி ஒரு பெரும் அமைப்பாக இயங்கி வருகின்றது.

எமது உறுப்பினர்களின் நலன்நோன்பு அமைப்பாக அவர்களின் இன்ப துன்பங்களில் அனைவரையும் இணைத்து வலுவான உறவுப்பாலத்தை கட்டியெழுப்பி வருகின்றது.

எமது அமைப்பின் செயற்பாடுகளாக

